# முரசொலி

வார இதழ்

2


ஆசிரியர்: மு. கருணாநிதி..

முரசு 2 | சென்னை | 3—6—55 | வெள்ளி | ஒலி 10


சென்ற மாநில மாநாட்டின் போது அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்; திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலிலே கலந்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படலாம். பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி சட்ட சபையை ஆக்ரமித்துக் கொள்ளும் காலம் ஒன்று வரலாம். அப்போது நாம் திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானத்தை முதல் மசோதாவாகக் கொண்டு வருவோம். அதை டெல்லி எதிர்க்கும். நாமெல்லாம் ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறுவோம். மீண்டும் தேர்தல் வரும். நம்முடைய சட்டசபை நுழைவும், வெளியேற்றமும் தொடர்ந்து நடைபெறும். தென்னகத்தில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பைத் தாங்க மாட்டாத டெல்லி அப்போது பணிந்துதான் ஆக வேண்டும். நாட்டை நம்மிடம் ஒப்புவித்துத்தான் தீரவேண்டும்!—என்னும் பொருள்பட அவர் சொன்ன வாசகங்கள் கூடியிருந்த லட்சோப லட்சம் வாலிப உள்ளங்களிடையே தென்றலெனத் தவழ்ந்தது.

போர்க் கருவிகள் ஏதுமில்லமலேயே நாடு மீட்கும் திட்டமொன்றை அண்ணா வெளியிட்டார்! அக மகிழ்ந்தோம்! பூரிப்பால நம் மார்புக்கூடு ஒருமுறை விம்மிவடிந்தது!

இன்று அதைவிட மகிழ்ச்சியான செய்தி யொன்று நம் செவிகளிலே பாய்ந்திருக்கிறது. ஏறக்குறைய அண்ணா கூறிய திட்டத்தையே வட அயர்லந்துக்காரர்கள் இப்போது அமுலாக்கிக் கொண்டிருக்கிறார்களாம்—பத்திரிகைச் செய்திகள் இந்தக் கருத்தைச் சொல்லும் போது நாம் அடைந்த இன்பம் எல்லை மீறக் காணகிறோம்!



சென்ற கிழமை பிரிட்டனிலே பொதுத் தேர்தல் செவ்வனே நடைபெற்றிருக்கிறது. ஆங்கிலநாடு பண்பட்ட ஜனநாயகவாதிகள் நிறைந்த நாடு—எனவே இந்தச் செய்தியிலே விசேஷம் ஏதுமில்லை! இருந்த போதும் அதைத் தொடர்ந்து வரும் புதுமைச் செய்தியை—தாயக விடுதலைப் போருக்கு தலைகளை விலையாகத் தரத் துடித்து நிற்போருக்கு பூரிப்பு வழங்கும் செய்தியை-தமிழ்ப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்தாலும், ஆங்கிலத் தாளகளால் அதை நம கண்களுக்குக் காட்டாமல் மறைத்து வைக்க முடியவில்லை!

நமக்கெல்லாம் நன்கு தெரியும், 1937-ல் டீ வேலரா வின் சீரிய தலைமையால் அயர்லந்து பூரண சுதந்தரம் பெற்றது. அப்போது அவர்கள் பெற்ற சுதந்தரம் மூளியாகிப் போனது! வட அயர்லந்து என்று அழைக்கப்படும் அல்ஸ்டர் மாகாணத்தை மட்டும் அடிமைத் தளைகொண்டு இறுகப் பிணைத்துவிட்டு, மீதமிருக்கும் தென் அயர்லந்துக்கு விடுதலை வழங்கினார்கள்.

'யாருக்கு வேண்டும் அந்த விடுதலை; தாயின் தலையை வெட்டிவிட்டு, உடலுக்கு வழங்கிய விடுதலை?'-என்று வாலிபப் பட்டாளங்கள் அன்றே போர் முழக்கத்துக்குத் துவக்கம் செய்தன.

தென் அயர்லந்து விடுதலை அமுது பருகிக் கொண்டிருந்த போது, அல்ஸ்டர் என்னும் வட அயர்லந்து மட்டும் ஆங்கில ஏகாதிபத்ய நஞ்சிலே நாக்கை நனைத்துக் கொண்டிருந்தது.

'வேரோடு சாயவேண்டிய ஏகாதிபத்யமே! போராடப் பிறந்தவர்கள், நாங்கள்! அல்ஸ்டரில் தவழும் நீரோடை-மணிக் குன்றம்—நீலத் திரைகடல்—இவையனைத்தும் தனியரசின் சொந்தம். சொத்தைக் கொடுத்துவிடு; இல்லையேல் சீறி எழும் புயல் காற்றில் புழுதியெனப் பறப்பாய்!'—என்னும் கோஷத்தை இலட்சிய கீதமாக்கிக் கொண்டு, ஆயிரமாயிரம் இளைஞர்கள் விடுதலைத் தணல் கொட்டும் எரிமலையை குமுறி எழும் பூகம்பத்தை—நாட்டிலே வளர்த்தார்கள்! ஆங்கில நாட்டு ஆக்ரமிப்பாளர்கள் நடந்து வந்த பாதையை ஒருமுறை திரும்பிப் பார்த்தார்கள்.

ஆமாம்; 1169-ல்தான் ஆங்கிலேயர்கள் அயர்லந்தின் மீது படையை மோதினார்கள். அந்த ஆண்டிலேதான் தாங்கள் வென்ற பகுதிக்கு 'பேல்' என்று பெயர் வைத்து, அன்னையை விதவைக் கோலத்தில் ஆழ்த்தினார்கள்! அன்றே ஆரம்பமாயிற்று அயர்லந்து வாழும் மக்களின் அடிமை வாழ்வு!

எங்கெந்த முறைகளைக் கையாண்டு அயர் மக்களை நசுக்கி ஒடுக்க முடியுமோ, அவைகளையெல்லாம் கடைப்பிடித்து ஆங்கிலேயர்கள் அவர்கள் சிங்காரத் தோட்டத்திலே நச்சு வளியை நுழைத்தார்கள்!

ஆங்கிலேயருக்கும், அயர்வாசிகளுக்கும் திருமணம் நடைபெற்றால் எங்கே அவர்களுக்கு ஆதரவாளர் தொகை வளர்ந்து விடுமோ வென்றெண்ணி, 'கில்கென்னி சட்டம்' என்னும் கொடுமையான சட்டத்தை நிறைவேற்றினார்கள் அதன்படி ஆங்கிலேயரும், ஐரிஷ்காரரும் கலப்பு மணம் செய்து கொள்வது சட்ட விரோதமாக்கப் பட்டது!

இந்தக் கொடுமைகளையெல்லாம எதிர்த்து நின்ற வீரனொருவன்-'உல்ப்டோன்' என்னும் பெயர் கொண்டோன்' 1798-ல் எழுந்த 'கலக'த்தின் போது தூக்கு மேடையிலே தன் இரத்தத்தைத் தெளித்தான்! உல்ப்டோன் போன்ற ஒப்பற்ற இளஞ்சிங்கங்களின் இரத்தத்தை நீராகக் கொண்டுதான் அயர்லாந்திலே ஆர்தர் கிரிப்பித் என்னும் மீசை வெளுக்காத வாலிபனின் அரும்பெரும முயற்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சக்கரவர்த்தியின் திருமகன் (5-ம் பக்கம்)




## எதிரிப் பொருத்தம்!

'வயதுக்குத் தகுந்த சிநேகிதம் வேண்டும்' — என்பார்கள். இது பழமொழி.

'வயதுக்குத் தகுந்த எதிரி வேண்டும்'—என்கிறார் ஒருவர். இது புதுமொழி.

இந்தப் புதுமொழிப் புலவர் யார் தெரியுமா? அசல் ஆச்சாரியார்தான்!

என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? இதோ 'பதவுரை'யும், 'பொழிப்புரை'யும் தருகிறேன்.

தன் ஆட்சிக் காலத்தில் மீசை வெளுக்காத 'ராயபுரம் சிறுவர்'களோடு ஹோதாவில் இறங்கி குஸ்தி போட்டார். பாவம்; இன்றோ அவர் வலிமையும், வாலிபமும் திரும்ப காய கல்பம் தேடிக் கொண்டிருக்கும் பரிதாபமான நிலையைப் பார்க்கிறோம்!

ஆஸ்ரமம் சென்ற ஆச்சாரியார் இனிமேல் 'சிறுவர்'களோடு விளையாடுவதில்லையென்று தீர்மானித்து விட்டார் போலும்! இப்போது வயதுக்கேற்ற வகையில் வைரிகளைத் தேடி அலைகிறார்.

அணுகுண்டுகளோடு விளையாடிய ஆச்சாரியார் சென்ற கிழமை திடீரென்று உள்நாட்டு விவகாரங்களை விசாரணை செய்ய ஆரம்பித்து விட்டார்!

தனக்கேற்ற எதிரியாக தன் வயதுடைய பெரியவர் ஒருவரையே இந்த முறை அவர் தேர்ந்தெடுத்திருக்கிறார். யார் அந்த எதிரி?

பாம்பைப் போல் அடிக்கடி வெளியே நீட்டும் நாக்கு படைத்த பண்டிதரா?

இல்லை; இல்லை!

ஏறக்குறைய ஆச்சாரியாரின் வயது கொண்ட ராஜ்குமாரி அமிர்தகௌரியைத்தான் குறிப்பிடுகிறேன்!

அந்த அம்மையாருடைய சுகாதார இலாக்காவோடு ஆச்சாரியாரும் தன் படையை மோத ஆரம்பித்திருக்கிறார்!

போரின் முதல் கட்டம், 'பி சி. ஜி. இன்ஜெக்ஷன் யாதொரு பயனும் அளிக்கவில்லை; அந்த முறையை நாடெங்கும் பரப்புவது பைத்தியக்காரத்தனம்'—என்று சொல்லி அவர் முரசு தட்டியதிலிருந்தே துவங்கிவிட்டது!

இந்திய உபகண்டத்திலே பி. சி ஜி இன்ஜெக்ஷன் முறை பரவுவதற்குக் காரணமாயிருந்தவர் அமிர்தகௌரிதான்; அவர் சார்ந்திருக்கும் சுகாதார இலாக்காதான்! பாவம்; அவரோடு ஆச்சாரியார் மோதுகிறார்!

'எதிரிப் பொருத்தம்' நல்ல விதத்திலே அமைந்திருந்த போதிலும் கூட என் உள்ளத்திலே புகையும் வருத்தத்தை வெளிக்காட்டாமலிருக்க முடியவில்லை.

முதன் முதலில் சென்னை மாகாணத்தில் யாருடைய ஆட்சிக் காலத்தில் அதிகமான அளவுக்கு பி. சி. ஜி. இன்ஜெக்ஷன் நடத்தினார்கள்?

சென்னை ஆஸ்பத்திரியிலே 'கியூ'விலே மக்கள் காத்திருந்தனரே; டி. பி. தடுப்பு மருந்தை உடலிலே செலுத்திக் கொள்ள! அப்போது யார் முதன்மந்திரி?

ஆச்சாரியார்தான்!

அப்போது ஊமையாக அடங்கிக் கிடந்தவர்தான், இப்போது பி. சி. ஜி.-யை எதிர்த்து 'வாய் வெடி'களை வீசுகிறார்!

தன் ஆட்சிக் காலத்தில் அவர் நினைத்திருந்தால் மருத்துவ நிபுணர்கள் யாரையும் கலக்காமல் தடுப்பு ஊசிகளுக்குத் தடை விதித்திருக்கலாமே!

எதிர்த்துக் கேட்டவர்களிடம், 'புத்தர் யாரைக் கேட்டார்? நபிகள் யாரைக் கலந்தார்?'—என்று ஏதாவது 'புதுச் சரக்கை' அவிழ்த்து விட்டிருக்கலாமே!

அப்போது ஏன் ஆமை நிலை? இப்போது ஏன் அதிர்வேட்டுக் கொளுத்தும் நிலை?

தவறு; தவறு! நான்தான் அவசரப்பட்டு விட்டேன். புத்தன் போதி மரத்துக்குப் போன பின்னர்தான் ஞானோதயம் கண்டான்.

ஆச்சாரியாரும் இப்போதுதான் ஆஸ்ரமவாசியாகியிருக்கிறார்—(விஞ்) ஞானோதயம் இப்போதுதான் அவர் கண்களுக்குத் தெரிகிறது!

அது மட்டுமல்ல, ஆங்கில நாட்டுப் பொதுத் தேர்தல் முடிவுகள் இன்னொரு உதயத்தையும் காட்டி விட்டன!

'அயிட்ரஜன் குண்டுகளை—'கல்கி' மொழியிலே ஜலஜ வாயு குண்டுகளை தடைசெய்ய வேண்டும்'—என்னும் பிரச்னையை மட்டுமே முன் நிறுத்தி, கிரேவ் சண்ட் தொகுதியிலே தொழிற் கட்சியிலிருந்து விலகி சர். ரிச்சர் ஆக்லண்டு என்னும் துரைமகனார் தேர்தலுக்கு நின்றார்!

ஜலஜ வாயு குண்டுகளை பகிஷ்கரித்து அமெரிக்கப் பிரதிநிதிகளைக் கூட்டி வைத்துக் கொண்டு கர்ஜனை புரிந்து வந்த ஆச்சாரியார் வழக்கம் போல இந்த சந்தர்ப்பத்தையும் பயன் படுத்திக் கொள்ளப் பார்த்தார்—'காமராசரே! என்னை ஒழித்து விட்டதாகக் கனவு காணும் கனம்களே! இதோ, குறுகிய மாகாண அரசியலிலிருந்து, நீண்டு வளர்ந்திருக்கும் அகில உலக அரசியல் நிலைக்குத் தாவுகிறேன், பாரீர்!'—என்று ஒரு முறை தன் அந்தராத்மாவோடு பேசிக் கொண்டார்! உடன் கிரேவ்சென்ட் தொகுதி மக்களுக்கு ஆக்லண்டை ஆதரிக்கும்படி அறிக்கையொன்று—வேண்டுகோள் வடிவிலே—வெளியிட்டார்!

குடியேற்றம் தொகுதி வோட்டர்களுக்கு காமராசரை ஆதரிக்கும்படி ஒரு வரி எழுத மனமில்லாத மாம்பலத்து முனிவர், ஏழாயிரம் மைல்கள் அப்பாலுள்ள கிரேவ்செண்ட் தொகுதிவோட்டர்களுக்கு நேசக் கரம் நீட்டினாராம்!

பாவம்! ஆச்சாரியார் ஆசீர்வதித்த காரணம்தானோ என்னவோ, ஆக்லண்ட் துரை மண் கவ்வி விட்டார்! இதே பிரச்னையை முன்னிறுத்தி போட்டியிட்ட லோவாசீட் என்பவர் டெபாசிட் இழந்திருக்கிறார்!

தென்னகத்து மக்கள் சார்பாக ஆச்சாரியாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்! இனியாவது அவர் கடல் தாண்டி வால் நீட்டி நஷ்டமடைய மாட்டாரென்று நம்புகிறோம்!

அதற்குள் அவசரப்பட்டு, 'அப்படியானால் அயிட்ரஜன் குண்டுகளை ஆதரிக்கிறீர்களா?'—என்று கேட்டு விடாதீர்கள்!

யாராவது உங்களை நோக்கி 'அணு ஆயுதங்கள் ஒழிய வேண்டுமா?' என்று வினவினால் 'ஆம்; ஆம்' என்று தலையாட்டுங்கள்!

'உலகமே ஒன்றாக—ஒரே நாடாக மாறும்போது திராவிட நாடு கேட்கிறீர்களே!'—என்று 'பெரிசு'கள் தோரணையில் வானத்தைப் பார்த்து வார்த்தை உதிர்க்கும் 'தாயக எதிரிகள்' இந்தக் கேள்வியைக் கேட்டால், அந்த நபரை அப்படியே நிற்க வையுங்கள். வானத்தை அண்ணாந்து பாருங்கள். கட்டை விரலால் தரையைக் கீறுங்கள். அசட்டுப் புன்னகையை வரவழைத்துக் கொள்ளுங்கள்! [இதுதான் 'ஒரே உலகம்' உபதேசிக்கும் 'நேரு ஸ்டைல்!]

''ஆஹா! என்ன சொன்னீர்கள்? அணு ஆயுதங்கள் ஒழிய வேண்டுமா?... ஹஹ்ஹா... (இந்தச் சமயம் அசட்டுச் சிரிப்பு உங்கள் உதட்டில் நாட்டியமாட வேண்டும்!) அணு ஆயுதங்கள் மட்டுமென்ன? எல்லா ஆயுதங்களுமே ஒழிய வேண்டும்! போர்க் கருவிகளைக் கடலில் தூக்கி எறிந்து விடவேண்டும்! 'போர்' என்ற வார்த்தையையே அகராதியிலிருந்து எடுத்துவிட வேண்டும்! யுத்தமே ஒழிய இருக்கும் போது அதற்குள்ளாக ஏன் அணுகுண்டை மட்டும் ஒழிக்க அவசரப் படுகிறீர்கள்?''—என்று கேட்டுவிட்டு மறுபடியும் உரக்கச் சிரியுங்கள்!

'ஒரே உலகம்' பேசி, நம் பிரிவினை முழக்கத்தை அடக்கப் பார்க்கும் ஆச்சாரியாரும், அவர்தம் தொண்டரடிப் பொடி ஆழ்வார்களும் அணு குண்டு ஒழிப்புப் பற்றி பேசினால் இப்படிச் சொல்லித்தான் நாம் அவர்கள் மூக்கறுக்க வேண்டும்!

★

## தமிழில் சீர்திருத்தம்!

பிரபல கட்டுரையாளர் விஜயதுங்காவின் எழுத்தோவியத்திலே கீழ்க்கண்ட நகைச்சுவைத் துணுக்கும் காணக் கிடக்கிறது.

ஒருநாள் டில்லி சாந்தினிசௌக்கில் யாரோ இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

''உனக்குக் கடவுளைப் பார்க்க ஆசையாக இருக்கிறதா? அப்படியானால் உன் கோட்டைக் கழற்றி என்னிடம் கொடு. நாலடி முன்னே போ. கடவுளைத் தரிசிக்கலாம்''—என்றான் முதல் ஆள்.

மற்றவனும் அப்படியே செய்தான். திரும்பி வந்தபோது அவன் முகத்திலே கடவுளைப் பார்த்துவிட்ட பேரானந்தம் தவழ்ந்தது.

அந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்த வழிப்போக்கனொருவன் இந்த நடவடிக்கைகளைப் பார்த்தான். 'நானும் கடவுளைப் பார்க்கிறேன்'—என்று கூச்சல் போட்டு, கோட்டைக் கழற்றிக் கொடுத்து விட்டு நாலடி முன்னே போனான். கடவுளைப் பார்க்க முடியவில்லை! மிகவும் வருத்தத்துடன் திரும்பிப் பார்த்தான்!

பகவானைக் காட்டும் பக்தர்களைக் காணோம்! கோட்டும், அதன் பையிலிருந்த கரன்சி நோட்டும் போய் விட்டன!

—தமிழிலே சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று, மற்றவர்களை திருப்திப் படுத்து

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 3—6—55 வெள்ளி

## கரும்புள்ளிகள்!

சென்ற கிழமை சென்னையின் சேரிகளைப் பார்வையிட்ட மத்திய அரசாங்க உதவி மந்திரி **தத்தார்**, அங்குள்ள நிலைமை கண்டு திடுக்கிட்டாராம். பத்திரிகைகளெல்லாம் பெரிய தலைப்பு தந்து அந்தச் செய்தியைப் பிரசுரித்திருக்கின்றன.

"மக்கள் குடியிருக்க லாயக்கில்லை; மிருகங்கள்தான் வசிக்கலாம்"—என்று கர்ஜனை புரிந்தாராம்.

அறுபதே குடும்பங்கள் வாழமுடியும் இடத்திலே சுமார் முன்னூறு குடும்பங்கள்—குழந்தை, குட்டிகளுடன்—முடங்கிக் கிடக்கிறதாம்!

சேரியை அடைவதற்கு வசதி வாய்ந்த சாலைகள்கூட கிடையாதாம்! ஓரடி அகலமுள்ள, ஆடேள் போகக்கூடிய பாதையைத்தான் அவர்கள் ராஜபாட்டையாக நினைத்து, உபயோகித்து வருகிறார்களாம்!

—இதுபோன்ற திடுக்கிடும் தகவல்கள் மத்திய சர்க்கார் மந்திரி வந்ததும் வெளியாகியிருக்கின்றன.

சென்னை நகரிலே மட்டும் 240 சேரிகளாம்! அதிலேதான் எலும்பும், தோலுமாய் ஆகிவிட்ட எண்ணற்ற பாட்டாளிகள் வாழ்கிறார்கள்!

கனல் சோரியும் கதிரவனுக்கு அஞ்சாது, ஓடி ஓடி ரிக்ஷா இழுப்போர் — கிடங்குத் தெருவிலே குன்றுபோல் உயர்ந்திருக்கும் பொதி மூட்டைகளைத் தம் தோளிலே சுமந்து செல்வோர்—இப்படி மாடு செய்யும் வேலையைச் செய்யும் மனிதர்கள்தான் அந்தச் சேரி வாழ்வோர்! பாடுபடும் கூட்டம்! காடு கெடுத்து நாடு செய்யும் உழைப்போர் பரம்பரை! அவர்களுக்குத்தான் இந்த வாட்டந்தரும் நிலை!

தங்களுக்குள்ள ஒரே உடைமையாம் உழைப்பு தருகிறார்கள்; அவர்கள் வாழ்வதற்கு உப்பரிக்கைகள் வேண்டாம்; காற்றோட்டமுள்ள ஓலைக் குடிசைகளையாவது ஒழுங்குபெற அமைத்துத் தரக்கூடாதா, ஊராளும் அரசாங்கத்தார்?

அரிஜனங்களின் மேம்பாடு குறித்து மேடைதோறும் அகவற்பா பாடுகின்றனர். அறநிலைய பாதுகாப்புக்குக்கூட 'அவர்களி'ல் ஒருவரையே நியமித்து விட்டதாகக் கூறிக்கொண்டு, நாடெங்கும் அகந்தையோடு திரிகின்றனர். இருந்தும் அமைச்சரின் அங்கலாய்ப்பு அவர்களை விட நம்மைத்தான் அதிகமாகத் திடுக்கிட வைக்கிறது!

சென்னை நகரத்து சேரி அபிவிருத்திக்கு உடனே திட்டம் தீட்டுங்கள்—என்று உத்தரவு போட்டாராம், கனம் தத்தார்.

தத்தாரின் இந்தப் பேச்சிலே நேர்மையின் சாயலோ, உண்மையின் பிரதிபலிப்போ இருப்பதாக நமக்குப் புலப்படவில்லை. ஆழ்ந்து நோக்கின் வழக்கமான வடக்கத்திய சாகசத்தைத்தான் காண முடிகிறது.

சேரிகளின் சீர்திருத்தத்திற்கு திட்டங்களா பஞ்சம்? சேரி வாழ்வோர் சுகாதார வசதிகள் பெறுவதற்கு சரியான திட்டங்கள் இல்லாததா முழு முதற் காரணம்?

அல்ல; அல்ல! திட்டங்கள் இருக்கின்றன, தத்தாரே, திகட்டுகிற அளவுக்கு பலன் தரும் திட்டங்கள் குவிந்து கிடக்கின்றன.

அந்தக் காகிதத் திட்டங்களை செயல் வடிவில் சமைக்க ஏழை சென்னை மாநிலம் எங்கே போகும்?

சேரி வாழ்வோரை 'சொர்க்க'த்தில் தள்ளுவதற்கு கார்ப்பரேஷன் காகிதக் கட்டுகளுடன், காமராசரைப் பார்க்க, காமராசர் டில்லியைப் பார்க்கும் பரிதாபமான நிலைமைதானே இப்போது இருந்து வருகிறது! சேரி வாழ்வோர்க்கென சென்னையில் திட்டங்களா இல்லை? அதை டில்லிக்கு அனுப்பி முகத்தில் சேறல்லவா பூசிக் கொள்கிறார்கள்!

தத்தார் குறிப்பிட்டதைப் போல சேரி சீர்திருத்தம் திட்டமில்லாத காரணத்தால் மட்டுமே தூங்கவில்லை. பலமாதங்களுக்கு முன்பே சென்னை டில்லிக்கு ஒரு திட்டம் அனுப்பி வைத்தது. பொருளுதவி கிடைக்கும் என்கிற திடமான நம்பிக்கையோடு! அந்த நம்பிக்கை வழக்கம்போல நாசமாகிவிட்டது. வடக்கு, **தன்** இயற்கைக் குணமான வட்டிவேந்தன் தோரணையிலே, **திட்டங்களை** நிறைவேற்ற மான்யங்கள் அளிக்க முடியாதென்றும், **வேண்டுமானாலும்** வட்டிக்கு பணம் கொடுத்து உதவுவதாகவும், ஒரு **முதலாளியின்** பாணியிலே பதில் அனுப்பியது. அதுமட்டுமல்ல; சென்னை **கார்ப்ப**ரேஷன் சேரி நலனுக்காக சுமார் நான்கு கோடி ரூபாய் **செலவில்** தயாரித்த திட்டம்கூட அதன் காரணமாகக் கைவிடப்பட்டதாம்!

உண்மை நிலை உணராத தத்தார், திட்டம் **தரவில்லையென்று** நம் மீதே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறார்.

குற்றவாளிக் கூண்டிலே நிற்க வேண்டியவர்கள், **அவரும் அவர்** பிரதிநிதியாக இருந்து பணியாற்றும், டில்லியுமாகும்! இந்த **நிலையில்** அவர் நம் மீது பழி சுமத்துவது வியப்பாகத்தான் இருக்கிறது!

வடக்கிலிருந்து, எப்போதாவது தெற்கு நோக்கி **திக் விஜயம்** செய்யும் 'கனம்'கள், தெல்லகத்தவரின் மனம் குளிர்விக்க **தேன் தட**விய செய்திகள் ஏதாவதொன்றைச் சொல்லித் தீர **வேண்டுமென்கிற** கட்டாய நிலைமைக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். **எனவேதான்** தத்தார் போன்றோர்கள் 'சேரிப் பிரச்னை' களைத் தத்து எடுத்துக் **கொள்**ளும் வேடிக்கையை நம்மால் பார்க்க முடிகிறது!

மந்திரியாரின் விசேஷத் தலையீட்டினால் சென்னையிலுள்ள **சேரி**கள் சீர்ப்படலாம்; ஆனால் திராவிடமெங்கும் பரந்து **கிடக்கும் சேரி**த் தமிழ்ச் சிற்றூர்களின் நிலை?

கேள்விக் குறிகள்தான் நமக்குப் பதிலாகக் **கிடைக்கின்றன.**

சென்னையிலுள்ள சேரிகளைவிட கிராமங்களிலுள்ள **சேரிகள்** சுகாதாரங் கெட்டவை; குடியிருப்புக்கே தகுதியற்றவை! **ஊர்க்** கடைசியிலே இருக்கும் அந்தப் புழுதி மேடுகளிலேதான் **இந்த** நாட்டுப் பழங்குடி மக்கள் உயிர் வளர்க்கிறார்கள்.

நிமிர்ந்தால் இடிக்கும் கூரை—மழை பெய்தால் **கரைந்து** நீராகும் சுவர்—'பள்ளு, பறையர்' என்னும் பட்டம் பெற்றோர் **இவை**களிலேதான் புழுப்போல் நெளிகிறார்கள்; புதுவாழ்வு **பெறத் துடிக்**கிறார்கள்!

சென்னைக்கு வந்த தத்தார் கொஞ்சம் தென் திசை நோக்கித் **தன்** பார்வையைத் திருப்ப வேண்டும். சேரிகள் தென்னகத்தின் **கரும்** புள்ளிகளாக இருக்கும் நிலைமை மாற்றியமைக்கப்படாவிட்டால், வருங்காலப் பிரச்னைகளில் முக்கியமான தொன்றாக அதுவும் '**விஸ்வ** ரூபம்' எடுக்குமென்பதை நம்மால் சுட்டிக் காட்டாமலிருக்க **முடிய**வில்லை!

## 'அவர்' பாதையிலே 'இவர்'!

பிரிட்டனிலே பொதுத் தேர்தல் முடிந்துவிட்டது. எந்த ஆண்டிலும் இல்லாத வகையில் இந்த ஆண்டு தேர்தல் முடிந்த சில மணிகளிலே முடிவு தெரிந்துவிட்டது.

கன்சர்வேட்டிவ் கட்சியே திரும்பவும் பதவிக்கு வந்திருக்கிறது. ஆந்தோனி ஈடன்தான் மறுபடியும் பிரதமர்!

இந்தியா, பர்மா போன்ற நாடுகளுக்கு சுதந்தரம் வழங்கி ஆசியாவிலே அதிகமான அளவுக்கு நற்பெயர் பெற்றிருக்கும் தொழிற் கட்சி மாபெரும் தோல்வியைத் தழுவ வேண்டிய பரிதாபமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது!



ஈடன்

தொழிற் கட்சியிலே பெவானுக்கும், இடதுசாரிகளுக்கும் உள்ள புகைச்சல்தான் அதன் தோல்விக்கு காரணமென்கின்றனர், சிலர்!

எது எப்படியிருந்தபோதிலும் இன்னும் ஐந்து ஆண்டு காலத்துக்கு கன்சர்வேட்டிவ்களை யாரும் அசைக்க முடியாது. சர்ச்சில் இல்லாமலேயே தங்களால் வாழ முடியுமென்பதை கன்சர்வேட்டிவ்கள் நிரூபித்து விட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால், சர்ச்சிலின் யூகம்தான் இப்போது பலித்திருக்கிறது. 1942-ம் ஆண்டில்—போர் நடந்துகொண்டிருந்த நேரம்—சர்ச்சில் அமெரிக்க ஜனாதிபதியைப் பார்க்கப் போனபோது, "இந்தப் பிரயாணத்தில் நான் செத்துவிட்டால் எனக்குப் பதிலாக ஆந்தோனி ஈடனைப் பிரதமராக்கிக்கொண்டு, புது மந்திரி சபை அமைத்துக் கொள்ளுங்கள்"—என்று மன்னருக்கு வேண்டுகோள் விடுத்துச் சென்றார்! அவர் சொன்னதை பிரிட்டிஷ் மக்கள் இப்போது நிறைவேற்றிவிட்டார்கள்!

ஆனால் ஒன்று! லேபர் கட்சி வெற்றி கண்டிருந்தால் அமெரிக்காவின் 'தான்தோன்றி'ப் போக்கு கொஞ்சம் குறையும் — என்று எதிர்பார்த்திருக்கலாம். இப்போது ஈடன் பிரதமர். அவர் ஐசனுக்கு வழி காண்பிக்கமாட்டார்; அவர் காட்டிய வழியிலேதான் இவர் போவார்!

# திரைவிலகுது; தீபம் தெரியுது!

# பரவுது; பரவுது, பிரிவினைக் கொள்கை!

திராவிடத்து அரசியலைப் பற்றி சுவையான செய்தி வழங்குவதிலே ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தும் ஒன்றை யொன்று முந்திக் கொள்கின்றன. மே 15-ந் தேதி 'சுதந்திரா' ஆங்கில இதழ் இந்தி வெறியர்களின் போக்கு பற்றியும், அதன் விளைவு பற்றியும் இப்படி எழுதியிருக்கிறது:

"தன்னுடைய அதிகாரத்தினலும், ஆர்ப்பாட்டத்தினலும் மற்ற மொழிக்காரர்களை அடக்கப் பார்க்கும் வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியம், அதற்கு முன்னிருந்த மற்ற ஏகாதிபத்தியங்களைப் போலவே எதிர்ப்பைத்தான் வளர்க்கிறது. அந்த எதிர்ப்பு ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர் போன்றோரை மகிழ்விக்கிறது. தலைநகரை டெல்லியிலிருந்து இந்திப் பேசப்படாத மற்ற தெற்குப் பிராந்தியத்துக்கு மாற்றப்படும் கோரிக்கையையோ, அல்லது டெல்லியிலிருந்தே தென்னாட்டைப் பிரிக்க வேண்டுமென்று போராடும் திராவிட இயக்கத்தவருக்கு பேராதரவையோ கொடுக்கக்கூடிய நிலைமையைத்தான் பிரிவினை மனப்பான்மையை வளர்க்கும் இந்த (இந்தி ஏகாதிபத்ய வாதிகளின்) போக்கு தென்னாட்டில் உருவாக்கி வருகிறது."

★

பம்பாயிலிருந்து வெளிவரும் **'பிளிட்ஸ்'** ஏட்டைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதன் ஆசிரியர் **ஆர். கே. கரஞ்ஜியா** சமீபத்தில் சீனு சென்றுவந்தவர். நாட்டு மக்களின் வாழ்வு பொசுக்கும் தேசிய வீரர்களது கண்ணிலே விரல்விட்டு ஆட்டும் வன்மை வாய்ந்தவர் கரஞ்ஜியா! புயல் நடையிலே புதுச் செய்திகள் தாங்கிவரும் 'பிளிட்ஸ்', ஆசியாவிலேயே அதிகமாக விற்பனையாகும் பத்திரிகைகளில் ஒன்று! அதன் மே-21 இதழிலே **'தெற்கு வடக்கை எதிர்க்கிறது — சுதந்தர சோஷலிச திராவிடக் குடியரசு கேட்கிறது'** என்னும் தலைப்பிலே தோழர் **எம். பி. ராதா கிருஷ்ணன்** என்பவர், வளர்ந்து வரும் நமது இயக்கத்தைப் பற்றி விரிவான கட்டுரையொன்று தீட்டியுள்ளார். அதில், ஆச்சாரியாரின் படத்தை வரைந்து, அதனடியில், **'வடநாட்டின் ஏஜெண்ட்'** —என்றும், பெரியாரின் படத்துக்குக் கீழே **'...தென்னாட்டுக் காரல் மார்க்ஸ்'** — என்றும், காமராசரின் படத்துக்குக் கீழே **'...பெரியாரின் ஆசீர்வாதம்!'** — என்றும், தலைப்பு கொடுத்திருக்கிறது. கட்டுரையின் முக்கியப் பகுதிகளைக் கீழே தந்திருக்கிறோம்:

**"...திராவிடர் இயக்கம் அயர்லாந்தின் ஷின்பேன் இயக்கத்தைப் பெரிதும் ஒத்திருக்கிறது...."**

(முன்னமேயே நமதிபக்கத்தை ஷின்-பேன் இயக்கத்தோடு ஒப்பிட்டு 'முரசொலி'யில் தலையங்கம் தீட்டியிருக்கிறோம்.)

**"...அயர் மக்கள் அன்னிய ஆங்கில ஆட்சியை எவ்வாறு எதிர்த்தார்களோ, அதைப் போலவே தமிழகத்தைச் சார்ந்த திராவிட மக்கள் அன்னிய வடநாட்டு -- ஆரிய ஆட்சியை எதிர்க்கிருர்கள்.."**

"(தனித் திராவிட நாட்டு கோரிக்கையோடு) திராவிட கழகம் பெரியார் ஈ. வே. ராமசாமியின் தலைமையின் கீழும், தன்னுடைய தளபதியான சி. என். அண்ணுதுரையின் துணையோடும், பொதுமக்களிடையே — குறிப்பாக தாழ்த்தப்பட்டோரிடையேயும், பாமர மக்களிடையேயும் தங்கள் பிரச்சாரத்தைத் துவக்கியது.

**"தோழர் அண்ணுதுரை தன்னுடையவலிமைவாய்ந்த, தனனிகரற்ற பேச்சுத் திறமையினல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள இளம உள்ளங்களைக் கவர்ந்து, சமுதாய, மத சீர்திருத்தங்கள்பால் அவர்களை ஊக்குவித்தார்.** நெடுஞ்செழியன் எம். ஏ., அன்பழகன் எம். ஏ., ஈ. வி. கே. சம்பத், மதியழகன், என். வி. நடராசன், மு. கருணநிதி போன்ற இளம் தலைவர்கள் ஆரம்ப காலத்திலேயே இந்த இயக்கத்தில் கலந்துகொண்டார்கள்...

**"...சமீபத்திய புள்ளி விபரத்தின்படி திராவிட முன்னேற்றக் கழகம் 2,50,000 அங்கத்தினர்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.** ஈ. வி. ஆர். கட்சியின் அங்கத்தினர் தொகை சரியாகத் தெரியாவிட்டாலும், அவர் பொது மக்கள் ஆதரவு தனக்குத்தான் இருப்பதாகச் சொல்லிக்கொள்கிருர்.

"ஜனநாயகக் கொள்கைகளைப் பரப்புவதில் பெரியார் ராமசாமி தலைசிறந்தவராவார். ஆனல் நடைமுறையில் அவர் ஒரு மூர்க்கமான சர்வாதிகாரி. சோஷலிசத்தின் அருமை, பெருமைபற்றி மணிக் கணக்கில் பேசுவார். ஆனல் நடைமுறையிலும், தனிப்பட்ட சொந்த வாழ்க்கையிலும் அவர் ஒரு ஆதிக்கம் செலுத்தும் முதலாளி."

"...திராவிடர் இயக்கம் என்ன சாதித்துவிட்டதென்று கேட்கத் தோன்றும்... அரசியல் துறையில் அந்த இடக்கம் பார்ப்பனரல்லாதாரின் விழிப்புக்குக் காரணமாயிருந்திருக்கிறது...... சமுதாயத் துறையில் தென்னாட்டின் ஜாதி ஒழிப்புக்குக் காரணமா யிருநதிருக்கிறது."

"...திராவிடர் இயக்கத்துக்கு வெற்றி கிடைக்குமா இல்லையா என்று யாரும் சோதிடம் கணிக்க முடியாது. அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் கிளப்பிய தெற்கு—வடக்கு பற்றிய வேறுபடுகள், இப்போது பார்லிமெண்டிலே, தமிழ் நாட்டு அங்கத்தினர்களால் மட்டுமல்ல; ஏனைய மைசூர், திரு-கொச்சி அங்கத்தினர்களாலும் எதிரொலிக்கப்பட்டு வருகிறதென்பது குறிப்பாக நோக்கத்தக்கது...

**"இதை யெல்லாம் வைத்து யூகிக்குமிடத்து தென்னாட்டில் பிராமணர் ஆதிக்கம் ஒரு முடிவுக்கு வந்து விட்டதாகவே கருதத் தோன்றுகிறது.**

**இந்த இயக்கத்தின் வேர் தமிழ் நாட்டில் மட்டும் இருந்த போதும் கூட, அதன் செல்வாக்கு ஆந்திரா, மைசூர், திரு-கோச்சி போன்ற மாநிலங்களிலும் பரவி வருகிறது..."**

★


## அந்த அழுகுரல்!

'வரண்டு கிடக்கும் பாரத மண்ணிலே சோஷலிச மழை பெய்யப் போகிறது. இதோ, அதற்காகவே நான் சீனுவிலிருந்து சில சிகப்பு மேகங்களைப் பிடித்து வந்திருக்கிறேன்'—இபபடி ஆவடியிலே ஒரு கூக்குரல் கேட்டது!

இப்போது டெல்லியிலிருந்து ஒரு கூக்குரல்—அல்ல; அல்ல! சோட்டா சோஷலிசம் செத்துக் கொண்டிருப்பதைக் குறிக்கும் அழுகுரல்—நம் காதுகளைக் குடைகிறது!

பணமுதலைகள் டெல்லியிலே வளர்த்து வந்த குட்டி இப்போது வளர்ந்து ஆளாகி ஆள் விழுங்தம் நிலை அடைந்து விட்டது! நேருவே அதற்கு முதல் இரையாகி விட்டது, பரிதாபத்திற்குரிய செய்திதான்!

என்ன என்று கேட்கிறீர்களா?




ஒரு கையில் டாட்டாவையும், மற்றொரு கையில் பிர்லாவையும் வைத்துக் கொண்டு, இவைதான் நான் படித்த மார்க்ஸ்— ஏங்கல்ஸ் —ஏடுகள் என்று கூறி, 'புது சோஷலிசம்' பேசும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு புது இலாக்காவொன்று கிடைத்திருக்கிறது.

இரும்பு—எஃகு இலாக்காவென்று ஒன்றை சிருஷ்டித்து அதை டி. டி. கே.யிடம் ஒப்படைத்திருக்கிருர்.

இந்தப் பெயரை மாற்றி விட்டு அதற்கு 'டாட்டா இலாக்கா' என்று பெயர் வைப்பதுதான் பொருத்தம் என்று பேசுகிறதாம், டி. டி. கே. யின் மனச்சாட்சி!

சென்ற கிழமை டாட்டாவின் தனிப்பட்ட நலனை உத்தேசித்து, இரும்பு—எஃகின் விலை உயர்த்தப் பட்டது நினைவிருக்கலாம்.

இந்தக் கிழமை டாட்டாக்களின் வியாபார நலன்களைப் பாதுகாப்பதற்குத் தனியாக இலாக்காவொன்று உருவாகிறது.

இதுதான் சோஷலிச திட்டமாம்! அதை நிறைவேற்றுவதற்குத்தான் ஆவடியிலே கூடினர்களாம்! வெட்கம்! வெட்கம்!!

டி. டி. கே. தென்னாட்டின் பிரபலமான சோப் எஜென்ட். இன்னும் கொஞ்ச நாட்கள் போனல் 'சோப் இலாக்கா' என்று ஒரு புது இலாக்காவைத் திறந்து, அதையும் கிருஷ்ணமாச்சாரியாரிடம் சோஷலிச சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னராம்— மோதிலால் மைந்தர் ஒப்படைப்பாரானல் நாம் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

# நடப்பதெல்லாம் நாராயணன் செயலா?

சூர்ப்பனகை மானபங்கம் செய்யப்பட்டது கண்ட கரன் முதலியோர் ராமனைப் பழி வாங்க முயன்று, இறுதியில் மரணமடைகிறார்கள் — ராமன் தனியொருவனாகவே நின்று அரக்கர்களின் சைன்யத்தையும் அதன் தலைவர்களையும் கொன்று குவிக்கிறான். ராமனின் சக்தியைப் பற்றி ஆச்சாரியார் எழுதுவதைக் கவனியுங்கள்:

"தெய்வமே மனித உருவத்தில் வந்து அனாதைகளுக்கு அபயம் தந்து அந்தச் சத்தியத்தைக் காக்க முனைப்பட்டால் அந்த மனிதன் எவ்வளவு செய்வான் என்பதைச் சிந்தனைச் சிறப்ப சக்தியைக் கொண்டு காணலாம்"

இதோடு விடவில்லை அவர்— இன்னும் படியுங்கள்:

"ராமனை அவதாரப் புருஷனாகத்தான் கம்பரும் வால்மீகியும் எடுத்துக் கொண்டு வெவ்வேறு விதத்தில் நமக்கு நிகழ்ச்சிகளை சித்தரிக்கிறார்கள்—சில இடங்களில் தெய்வப் பிரசாதம் பெற்ற வீரனாகவும், சில இடங்களில் தெய்வமேயாகவும் எடுத்துக் காட்டுகிறார்கள்"

(அத்தியாயம் 47. 9-3-55 'கல்கி')

முன்னையக் கட்டுரைகளில் இதே ஆச்சாரியார் அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்? அதையும் படியுங்கள்:

"வால்மீகி ரிஷியின் காவியத்தில் ராமன் ஒரு மகா புருஷன்—ஈஸ்வர அவதாரமாக வைத்து எழுதவில்லை"

(1954, மே-23—'கல்கி')

ஒரே தொடர் கட்டுரை — ஒரே பத்திரிகையில் வெளியாகிறது — 54-ம் வருடம் மே மாதத்திலே, வால்மீகி, ராமனை அவதாரமாக சிருஷ்டிக்கவில்லை என்கிறார். 55-ம் வருடம் மே மாதத்தில் கம்பரும், வால்மீகியும் ராமனை அவதார புருஷனாகவே எடுத்துக்கொண்டு எழுதியிருக்கிறார்கள் என்கிறார்—ஆச்சாரியாரின் பின்னணி வாத்யக் கோஷ்டியினர், இந்த முரண்பாட்டுக்கு என்ன பதில் சொல்வார்கள்? மூளைக் கோளாறு?—குழப்பமா?—கொஞ்சம் சிந்திக்கத் தெரிந்தவனும் இந்தக் கேள்வியைக் கேட்டுத்தானே தீருவான்? பாவம்; ஆச்சாரியார் ஏன் அனாவசியமாக இப்படி சகதியிலே காலை விட்டுக் கொண்டு சங்கடப்படுகிறாரோ தெரியவில்லை — தெரியாமலென்ன; தனது சமுதாயத்தின் நிரந்தர நல்வாழ்வுக்காக அந்த சாணக்கியர் ஆயிரமாயிரம் முரண்பாடுகளை அணைத்துக் கொள்ளவும்தயாராயிருக்கிறார். ஆனால், ஒன்று—இது, "ஏன்? எப்படி?" என்று கேள்விக்குறி எழுப்பாத பழைய காலமல்ல என்பதை மட்டும் பரிதாபத்திற்குரிய அந்தப் பார்ப்பனத் தலைவருக்கு நினைவு படுத்துகிறேன்.

இன்னொரு வடிகட்டிய வரட்டுக் குழப்பத்தைப் பாருங்கள்:

"நாராயணனே, தானே ராமன் என்று அறிவான். ஆனால் ராமன், தானே நாராயணன் என்றெண்ணவில்லை"

9—1—55 இதழில் அவரேதான் இதையும் எழுதியிருக்கிறார். இதை விவரிக்கவோ, விவாதிக்கவோ வேண்டிய அவசியமில்லை. ஆச்சாரியார் எழுதியுள்ள இந்த வரிகளுக்கு ஏதாவது தெளிவான பொருள் தெரிகிறதா என்பதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்—அப்படிக் கண்டுபிடித்துச் சொல்பவர்களுக்கு—அல்லது அவர் எழுதியது சரியானதுதான் என்று விளக்கம் தருபவர்களுக்கு—சரியான பரிசு தருவதோடு, என்னுடைய தோல்வியையும் பகிரங்கமாக ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

நிற்க, சூர்ப்பனகை பங்கப்பட்டதையும், கரன் முதலியோர் அழிக்கப்பட்டதையும் கேள்வியுற்ற ராவணன், சீதையை அபகரிக்கத் திட்டமிட்டு, ஆஸ்ரம வாழ்க்கை நடத்தும் மாரீசன் என்னும் ராக்ஷச தபசியின் உதவியை நாடுகிறான்— அந்த மாரீசன், ராவணனுக்கு புத்தி சொல்லி இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவிடுகிறான். மீண்டும் ராவணன் மாரீசனை அணுகி உதவி கேட்கிறான். மானாக உருவெடுத்து சீதையை மயக்குமாறு வேண்டுகிறான். மாரீசன் அதை மறுத்து நீண்ட உபதேசம் செய்கிறான். ராமன், தன்னையும் ராவணனையும் அழித்துவிடுவான் என்றும், **பாதகச் செயல் புரிய** தான் உடன்பட மாட்டேன் என்றும் மாரீசன் கூறுகிறான். மாரீசனின் 'தர்ம நியாய'ங் கலந்த மறுப்புரைகளை ஆச்சாரியாரே இரண்டு மூன்று பக்கங்கள் எழுதித் தள்ளியிருக்கிறார். மாரீசன் மறுப்பது கண்ட ராவணன், "என் இஷ்டப்படி செய்யாவிட்டால், உன்னை இங்கேயே வதம் செய்வேன்" என்கிறான்.

சக்கரவர்த்தியின் திருமகள்
மூக்காஜி

மாரீசன் பேசுகிறான், கேளுங்கள்:

"ராவணா! நான் உனக்கு இதத்தைச் சொல்லிப் பார்த்தேன்—நீ கேட்கவில்லை. நீ சொன்னதுபோல் நான் செய்தால் என் உயிர் போவது நிச்சயம். உன்னால் மாள்வதைவிட பகையாளிக்கு என் உயிரைக் கொடுத்துவிடுவது மேல்"

(23—1—55—'கல்கி')

தான் ராமனால் செத்துவிடுவோம் என்று மாரீசனுக்குத் தெரிகிறது — ராவணன் பேச்சைக் கேட்காவிட்டாலும் செத்துவிடுவோம் என்றும் அவனுக்குத் தெரிகிறது—எப்படியும் சாவு இருக்கிறது-இந்த நிலையில், அவன் என்ன செய்திருக்க வேண்டும்?

ராவணனால் செத்தால், சீதைக்கும் ராமருக்கும் தொந்திரவு கொடுக்காமலே தீர்ந்து போய்விடலாம்-ராமனால் சாவதற்குத் தயாரானால், சீதைக்கும் அவள் கணவனுக்கும் தொந்திரவுகள் கொடுத்தாக வேண்டும் என்பதோடு, ராவணனையும் தீய வழியில் புகச் செய்ய வழி வகுத்ததாகிவிடும். ஆகவே, மாரீசன் எனும் ஆஸ்ரம வாசி, ராவணன் கையாலேயே மாண்டிருக்கலாம்—ராமர் சீதை முதலியவர்களின் கொடிய வார்த்தைகளுக்கு இலக்காகியிருக்க வேண்டியதில்லை—அவன் கருத்துப்படி 'பாபச் செய்கை'யிலிருந்தும் விடுதலை பெற்றிருக்கலாம். ஏனோ, அவன் அதைச் செய்யவில்லை. ஆச்சாரியாருக்குத்தான் வெளிச்சம்!

மாரீசன் மானாகச் சென்றான். தேனூறும் இதழ் திறந்து தேவி சீதை, "அந்த மானைப் பிடித்துத் தருக" என ராமனை வேண்டினாள். லட்சுமணனை சீதைக்குக் காவல் வைத்துவிட்டு, ராமன் மானைத் துரத்தி வெகு தூரம் போகிறான். மான் அகப்படாமல் ஓடியதால் அதன்மீது அம்பு எய்கிறான். அந்த மான் வடிவ மாரீசன், ராமன் குரல் போலத் தன் குரலை மாற்றிக் கொண்டு, "ஐயோ லட்சுமணா!" என்று உரக்கக் கத்துகிறான். அது கண்ட ராமன்,

"ஓகோ! இது பெரிய மோசம்; இந்த மோசத்தால் லக்ஷ்மணன் ஏமாற்றமடைந்து சீதையைத் தனியாகக் காட்டில் விட்டு விட்டு என்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டிருந்தால் பெரிய அபாயமாகுமே! சீதையை அபகரித்துக் கொண்டு போகவோ, கொன்று தின்று விடவோ அரக்கர்கள் இந்த மோசத்தைச் செய்திருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. 'ஹா செத்தேன்' என்ற என்னுடைய குரலைக் கேட்டதாக எண்ணி உடனே சீதை பயந்து லக்ஷ்மணனை என்னிடம் அனுப்பிவிடுவாள். நரிகள் அவலட்சணமாக ஊளையிடுகின்றன. பறவைகளும் மிருகங்களும் துரதிருஷ்டக் குறிகளைக் காட்டுகின்றன. உள்ளத்தில் தைரியத்துக்கு பதில் நடுக்கமாக இருக்கிறது. நான் காண்பதெல்லாம் அபசகுனங்களாகவே இருக்கின்றன. பெரிய ஆபத்தை அடைவேன் என்றே நினைக்கிறேன்."

(13—2—55 'கல்கி')

ராமன் வருத்தமுறுவதைக் காணும்போது, சிரிப்புத்தான் வருகிறது — "அவன் மனைவியைப் பற்றி அவனுக்கல்லவா கவலை; உனக்கு சிரிப்புத்தான் வரும்!" என்று வசை பாடாதீர்கள் ஆச்சாரியாரே! கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! ராமனைப் போன்ற குரலில் மாரீசன் 'லட்சுமணா!' என்று கத்திவிட்டு செத்துவிட்டான். இதைக் கேட்டு சீதை பயந்து, லக்ஷ்மணன் நடுங்கி, அவளைத் தனியே விட்டு வந்துவிடுவானோ என ராமன் அஞ்சுகிறான். மாரீசன் கத்திய அதே சமயம், ஏன் ராமனும் கத்தியிருக்கக் கூடாது?

"தம்பீ, லக்ஷ்மணா! இது மானல்ல; மாரீசன்! மாண்டு

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

## ★ நடக்கட்டும் பிழைப்பு; எவ்வளவு நாளைக்கு? ★

## 2. தந்தையின் சொத்து

# புதையல்

### மு. கருணாநிதி.

குமாரவடிவின் முடிவைச் சொல்லிவிட்டு, மாயாண்டிக் கிழவர் மௌனமாக இருந்தார். துரையின் முகமும் வெளிறிப் போய் இருந்தது. பரிமளா, அவனையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். துரையின் உள்ளத்திலே ஏதோ ஒரு குழப்பம்—அவன் எழுந்து அங்குமிங்கும் உலவினான். அவன் கண்களிலே கலக்கம்—பேசுவதற்கு சிறிது நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிறகு, கிழவரைப் பார்த்துக் கிண்டல் கலந்த ஆத்திரத் தொனியிலே கேட்டான்:

"ஊருக்கு உபதேசம் செய்யும் ஞானியாகவும் மருத்துவராகவும் இருந்து என் தந்தை வாழ்க்கையை நடத்தினார் என்று முதலில் கூறினீர்களே; அதற்கும் இப்போது சொல்கிற கதைக்கும் நிறைய முரண்பாடு இருக்கிறதே?"

"ஆமாம்-முதலில் அப்படித்தான் சொன்னேன். நீ தோண்டித் தோண்டி இப்படிக் கேள்விகளைப் போட்டு உண்மை விஷயத்தை கிரகித்துக் கொள்வாய் என்று எனக்கு அட்போது தெரியாது—

"ஞானியாகவும் - மருத்துவனாகவும் வாழ்க்கை நடத்தியது உண்மைதான்! ஆனால் அது குமாரவடிவு அல்ல—இந்த மாயாண்டிதான்! உன் தகப்பனின் தவறுகளை உன்னிடம் சொல்லக்கூடாது என்பதற்காகவே முதலில் மறைத்தேன். அவன் இறந்த பிறகு நான் மேற்கொண்ட மருத்துவத் தொழிலை அவன் செய்து வந்த தொழிலென்று உன்னிடம் பொய் சொன்னேன். நீ என்ன, என்னைப் பொய் சொல்ல விடுகிறாயா? உண்மைகளையெல்லாம் சக்கவைத்து விட்டாய்"

'மருங்கப்பள்ளம் கிராமம் தான் என் தந்தையின் வாழ்க்கைப் பாதையைத் திருப்பியது என்றீர்களே முன்பு—அது'"

"அதுவா?—அது தெரியவில்லையா உனக்கு! கொள்ளைக்கார குமாரவடிவை வாழ்க்கைப் பாதையிலிருந்து திருப்பி சாவுப் பாதைக்கு அழைத்துச் செல்ல அந்த கிராமம் காரணமாயிருந்தது என்பதையே அப்படிச் சொன்னேன்"

"அது போகட்டும்—ஏதோ புதையல் ரகசியம் அப்பாவிடம் கிடைத்தது—ஆனால் அதை யாருக்காக எடுக்க வேண்டும் என்று அப்பா கவலைப்பட்டார்—என்பதாகத் தெரிவித்தீர்களே; அதுவும் பொய்தானா?"

"கவலைப்பட்டது உண்மைதான்—புதையல் ரகசியம் கிடைத்ததும் உண்மைதான்.

> "எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...
> காக்கை மூக்கு நிழலிலே...
> கள்வர் புகும் வழியிலே...
> கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
> எழுபது கோடி பசும்பொன்..."

குமாரவடிவு-தன் மரண முகப்பிலே அந்த ரகசியத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டுத்தான் கண்ணை மூடினான். அப்படி ஒப்படைக்கும்போது தான் என்னிடம், அவன் அழுது கொண்டே இதைச் சொன்னான்: 'மாயாண்டி-உண்மையிலேயே இந்தக் குறிப்பின் படி புதையல் கிடைத்தாலும், அதை யாருக்காக நான் எடுக்க வேண்டும்? இதோ, ஒரு நொடியில் சாகப்போகிறேன். இந்தா, இதை நீயே வைத்துக் கொள்; புதையலை எடுத்து ஏதாவது நல்ல காரியங்கள் செய்ய முடியுமானால் முயற்சித்துப் பார்; அப்படி முடியாவிட்டால் யாரிடமாவது சுயநலக்காரர்களிடம் அது சிக்கிவிடாமல் பார்த்துக் கொள்! மாயாண்டி! என் மகனையும், மகளையும் சந்திப்பாயானால் என்னுடைய சதையை அவர்களிடம் தவறியும் சொல்லி விடாதே'

"இந்த வார்த்தைகளோடு அவன் மூச்சும் அடங்கி விட்டது புதையலைக் கண்டு பிடிக்கும் செப்பேடும், சிறுகல்லும் என் கையிலே! அவைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை"

துரை குறுக்கிட்டுப் பேசினான்: "ஆமாம்-அந்த செப்பேடும் சிறுகல்லும் என் தந்தையிடம் எப்படிக் கிடைத்தன?"

"அதைத்தானே சொல்ல வருகிறேன். மருங்கப்பள்ளம் கோயிலில் விக்ரகத்தைப் பெயர்க்கப் போனோமே—அப்போது குமாரவடிவிடம் அந்த ரகசியம் கிடைத்தது அவனைக் கோயிலுக்கு அனுப்பிவிட்டு நான் தூரத்தில் நின்றேன், காவலாக! கோயிலில் நுழைந்த அவன் வழி தெரிவதற்கோ, எதற்கோ தீக்குச்சியைக் கிழித்திருக்கிறான். அவன் கண்களிலே இந்த எழுத்துக்கள் பட்டிருக்கின்றன.

'எழுவானுக்கும்
தொழுவானுக்கும் இடையிலே
காக்கை மூக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் கம்மாளர்
கண்ணிலே...
எழுபது கோடி பசும் பொன்'—

என்பதுதான் அந்த வாசகம். குமாரவடிவு யோசித்திருக்கிறான். சுற்றுமுற்றும் பார்த்திருக்கிறான். வார்த்தைக்கு வார்த்தை பொருள் பிரித்திருக்கிறான். 'எழுவான்' என்பது உற்சவ விக்ரகம்—விழாக் காலங்களில் எழுந்தருளுகின்ற சிலை. 'தொழுவான்' என்பது மூல விக்ரகம். ஆகவே மூல விக்ரகத்துக்கும், உற்சவ விக்ரகத்துக்கும் இடையிலே—என்று பொருள் கொண்டான். 'காக்கைமூக்கு நிழலிலே' அதையும் யோசித்திருக்கிறான். அங்கே சனீஸ்வரனின் சிலையொன்று காக்கை வாகனத்தில் அமர்ந்திருக்கிறது. அந்தக் காக்கையின் மூக்கு நிழல் எங்கெங்கே படுகிறது என்று கையிலேயுள்ள தீக்குச்சியின் மூலம் கவனித்து, அதையும் குறித்துக் கொண்டிருக்கிறான், 'கள்வர் புகும் வழியில்'-என்பதற்கு அர்த்தமே தேவையில்லை. அவன் புகுந்த வழியும், அர்ச்சகர்கள் புகுந்திடும் வழியும் ஒன்றுதானே! ஆகவே கள்வர் புகும் வழியை சுலபமாகக் கண்டுபிடித்து விட்டான். 'கண்டாலும் கம்மாளர் கண்ணிலே'-என்பதுதான் அவனைக் கொஞ்சம் குழப்பியிருக்கிறது. பிறகு அந்தக் குழப்பத்தையும் தீர்த்துக் கொண்டான். யாரோ ஜாதிப்பித்து பிடித்தவர்கள் கையிலே சிக்கியிருக்கிறது இந்த ரகசியம் என்று முடிவு கட்டிக்கொண்டு, கையிலேயுள்ள கடப்பாறையால் தான் குறித்துக் கொண்ட இடத்தில் குத்தினான். 'டங்' என்று சப்தம் கேட்டது. மீண்டும் தோண்டிப் பார்த்தான். ஒரு சிறிய பெட்டி—மிகச் சிறிய பெட்டி-அதிலே ஒரு சிறு கல்-செப்பேடு! அந்தச் செப்பேட்டிலே புதையலைக் கண்டுபிடிக்கும் வழிகள்-அந்த இடத்திலே கொண்டு போய் அந்தச் சிறு கல்லை வைத்தால், புதையல் இருக்குமிடத்திற்கு அந்தக் கல் இழுக்கப்படும்-அங்கே தோண்டினால் ஏராளமான பொன் கிடைக்கும்-அத்தகைய மகத்தான ரகசியம் அவனிடம் அகப்பட்டது. அதை எடுத்துக் கொண்டு திரும்பும்போது தான் பாம்பு அவனைக் கடித்தது. சப்தம் போட்டான். உள்ளே ஓடினேன். பாம்பை உதறி விட்டு வெளியே ஓடிவந்தான்.


கருணாநிதியின் கருத்தோவியம்

சென்னை தியாகராயர் கல்லூரி மண்டபத்தில்
12—6—55 மாலை 6-30 மணிக்கு

இலட்சிய நடிகர் எஸ். எஸ் ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், எம். என். ராஜம், இந்திரா முதலியோர் நடிக்கும்,

மணிமகுடம் [நாடகம்]

போக போக்கியத்தின் மத்தியிலே ஒரு புத்தன் தோன்றினான்—
இதோ, பொன் குவியல்களுக்கிடையே ஒரு
ஏழை உள்ளம் தோன்றுகிறது—
உணர்ச்சி மிக்க உரையாடல்கள்!
உத்வேகம் நிறைந்த நிகழ்ச்சிகள்!!
காணத் தவறாதீர்! கருத்து மிகுந்த கலைக் காட்சி!!
டிக்கெட் விபரம்: ரூ. 3, 2, 1, அணா 8.
அமைப்பாளர்; கே. வி. ராமய்யா.

விஷயத்தை விசாரித்தேன்—நடந்தவைகளைச் சொன்னான்''

பரிமளா இடை மறித்து "அவரைப் பாம்பு கடிக்கக் காரணம்?" என்று ஆவலாகக் கேட்டாள்.

"பகவானின் கோபத்தாலோ, புதையல் ரகசியத்தின் மகத்துவத்தாலோ பாம்பு கடித்தது என்று எண்ணுகிறாயா? — அது ஒன்றுமில்லை; அப்படியானால், அந்தப் பாம்பு என்னையும் கடித்திருக்க வேண்டுமே — குமாரவடிவு கொடுத்த ரகசியம் என்னிடம் தான் இருக்கிறது. இது நாள் வரையில் எந்தப் பாம்பும் என்னைத் தீண்டவில்லையே. கோயில்களில் விக்ரகங்களைப் புரட்டி காசு திருடினான் குமாரவடிவு என்பதற்காக பாம்பு கடித்திருக்குமென்றால், குமாரவடிவை விடப் பெரிய கொள்ளைக்காரர்கள் கோயில் தர்மகர்த்தாக்கள் என்ற பெயரிலே—அர்ச்சகர்கள், பூசாரிகள் என்ற பெயரிலே—கோயில் சொத்துக்களை சுருட்டிக் கொண்டிருக்கிறார்களே; அவர்களையெல்லாம் அங்கத்திற்கு ஒரு பாம்பு வீதம் கடித்திருக்க வேண்டுமே! பாம்பு கடித்ததற்கு பழைய நம்பிக்கைப்படி காரணம் எதுவுமில்லை பரிமளம்! பழமையான கோயில் — அதிகப் புழக்கமில்லாத இடம் — புதரும் மரங்களும் நிறைந்த பகுதி-பாம்புகள் தங்கள் வாசஸ்தலமாக அந்த ஆலயத்தை ஆக்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளிலே ஒன்றை, அவசரத்திலே குமாரவடிவு மிதித்திருக்கிறான். கடித்து விட்டது. குற்றவாளிகளைத் தண்டிக்க கோயில் கொண்ட கடவுள் பாம்புகளை அனுப்புவதென்றால், தன் ஆலயத்துக்கு முன்பு பச்சைக் குழந்தையை ஒரு படுபாவி சாமியார் கொலை செய்தானே, அந்தக் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருப்பானேன்?—

"குமாரவடிவு கோயிலில் நுழைந்ததற்கும்—பாம்பு கடித்ததற்கும் புதிய அல்லது பழைய காரணம் எதுவுமில்லை. இயற்கையாக—சந்தர்ப்ப வசத்தால் நடந்துவிட்டது. அவ்வளவுதான்!''

துரையின் கண்களிலே நீர்த்துளிகள் தேங்கி நின்றன. தன் தந்தை, திருடித்தான் வாழ வேண்டும் என்கிற நிலை பெற்றதும், அப்படித் திருடும்போது தேடற்கரிய திரவியம் கிடைத்தும், அதை எடுத்து அனுபவிக்க முடியாமல் மாண்டு போக நேரிட்டதும், ஆகிய இந்தச் செய்திகள் அவனை அனலில் தள்ளி வாட்டின. 'அப்பா!' என்று ஈன சுரத்தில் முணகினான். அவன் இருதயத்திலே ஒப்பாரியும் புலம்பலும் ஆரம்பமாகி விட்டது என்பதை அவன் கண்கள் தெரியப்படுத்திக் கொண்டிருந்தன. பரிமளாவுக்கும், தன் அத்தானின் நிலை சங்கடத்தைக் கொடுத்தது. மாயாண்டிக் கிழவர், அவனைப் பரிவோடு பார்த்து—

"பார்த்தாயா — இதற்குத்தான் நான் உண்மையைச் சொல்லமாட்டேன் என்றேன். என்னிடம் எந்தக் கதையையும் கேட்காதே என்றேன்- விடமாட்டேன் என்றாய் -இப்போது விசனப்படுகிறாய்'' என்று அங்கலாய்த்துக் கொண்டார்—

"பெரியவரே!—பாம்பின் விஷத்தை இறக்கி அப்பாவைக் காப்பாற்ற முடியாமலே போய்விட்டதா?''-துரை கேட்டான் சோகத்தோடு!

"முடியாமல்தான் போய் விட்டது. எத்தனையோ மூலிகைகளைக் கொண்டு வந்து முயற்சித்துப் பார்த்தேன்; முடியவில்லை. அவனும், தான் இறந்து விடுவோம் என்பதைத் திண்ணமாகத் தெரிந்து கொண்டான். புதையல் ரகசியம் கிடைத்த விபரத்தை மயக்கத்தோடு சொன்னான். சொல்லி விட்டு என்னைப் பிரிந்தான்—'கோயில் திருடன் ஒழிந்தான்' என்று ஊரிலே பேசிக் கொண்டார்கள். ஆனால் குமாரவடிவுதான் அந்தத் திருடன் என்பது யாருக்கும் தெரியாது—

"கோயில்களிலே திருட்டு நின்று விட்டது. அதையொட்டி திருடன் ஒழிந்தான் என்று கூறி விட்டார்கள். எனக்கு சரியான துணையில்லாத காரணத்தால் இரவில் கோயில் நுழையும் தொழிலை நிறுத்தி விட்டேன். தொழிலை நிறுத்தியதற்கு அது மட்டுமல்ல காரணம்; எனக்கு அந்தத் தொழிலை நீடித்து நடத்தப் பிரியமும் இல்லை போலீசார் கையில் சிக்கி விட்டால் என்னிடம் இருக்கிற புதையல் ரகசியமும் அல்லவா பறி போய்விடும்—

"நீ போலீஸ் உடையில் என்னைப் பிடித்த போதுகூட அதற்காகத் தானே நான் அதிகமாக பயப்பட்டேன். ஆகவே, பிழைப்பு நடத்த வேறு வழிகளை யோசித்தேன். உன் தகப்பன் செய்தான் என்று பொய் சொன்னேனே; அந்த மருத்துவத் தொழிலைமேற்கொண்டேன். வயிற்றைக் கழுவ மார்க்கம் ஏற்பட்டது. சித்தர் என்று என்னை நானே எண்ணிக் கொண்டு அதன்படி நடக்கலானேன்—

"என் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பங்களும், உன் தந்தையின் வாழ்வில் ஏற்பட்ட திடுக்கிடும் சம்பவங்களும், எனக்குப் புதிய புதிய எண்ணங்களை வடித்துக் கொடுத்தன. அனுபவம் சிறந்த ஆசானல்லவா? அந்த அனுபவங்களைப் பின்னணியாக அமைத்து, என் மனதில் தோன்றிய கருத்துக்களை இசைத்தேன்—

"தப்போ—சரியோ-எனக்கு சரியென்று பட்டவைகள், மற்றவருக்கும் சரியென்று பட வேண்டுமென்ற பிடிவாதம் ஏற்பட்டது எனக்கு! இதெல்லாம் குமாரவடிவு இறந்த பிறகு—ஆம்; கொள்ளைக்காரன் இறந்த பிறகு—என் நிழல்-என் ஆருயிர் நண்பன் இறந்த பிறகு ஏற்பட்ட மாறுதல்கள்—

"வெறும்மாயாண்டி, மாயாண்டி வைத்தியரானேன். பிறகு மாயாண்டிச் சாமியாராகவும் ஆனேன். பெரியதொரு பொக்கிஷத்தின் சாவி என்னிடமிருக்கிறது. பொக்கிஷமும் இருக்கிறது. ஆனால், அதைத் திறந்து பொன்மலைகளை வெளியே எடுக்க எனக்குப் பயமாக இருக்கிறது''

"மருங்கப் பள்ளம் புதையலைத்தானே குறிப்பிடுகிறீர்கள்?" -துரை கேட்டான் இப்படி.

"ஆமாம்; அதைத்தான் குறிப்பிடுகிறேன். ஒண்டிக்கட்டையாக ஊர் சுற்றுவதிலே இருக்கிற ஆனந்தம், அந்தப் புதையலை எடுத்த பிறகு எனக்கு ஏற்படுமா என்பது சந்தேகந்தான்! அதுவுமின்றி அதை எடுத்து விட்டேன் என்ற சேதி தெரிந்துவிட்டால், எத்தனைக் கத்திகள் என் முகத்திலே பாயுமோ—அதுவும் பயமாயிருக்கிறது! வேறு யாரிடமாவது இந்த ரகசியத்தைக் கொடுத்து விடுவோமென்றால், குமாரவடிவு சொன்னது போல, யாராவது சுய நலக்காரர்கள் கையிலே சிக்கி—அந்தப் புதையல் சீரழிந்து விடுமே என்கிற எண்ணம் குறுக்கிடுகிறது. என்னிடம் புதையலைப் பற்றிய ரகசியம் இருப்பது ஒரு சிலருக்குத் தெரிந்து விட்டது என்பதும் புரிந்து விட்டது விஷயம் முற்றுவதற்குள் இந்த ஊரை விட்டே ஓடி விடலாம் என்றுதான் இலங்கைக்குப் புறப்பட்டேன். போகும் வழியில்தான் மனோராவில் உங்களை சந்தித்தேன். திரும்பி, உங்களோடு இப்படிக் கதை பேச வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. அதோடு என் நண்பனின் மகனைக் கண்ட சந்தோஷமும் ஏற்பட்டது. இனிமேல் எனக்குக் கவலை இல்லை. இந்த சொத்துக்கு உரியவன் யாரோ, அவனிடமே இதைக் கொடுத்து விடலாம்''

கிழவர் பெரு மூச்சு விட்டார்.

"பெரியவரே! அந்த ரகசியம், கோயிலிலே புதைக்கப் பட்ட காரணம் என்ன?'' என்றான் துரை.

"மருங்கப் பள்ளத்திலே ஒரு கொல்லர் குடும்பத்தைப் பற்றி பெரிய கதை சொல்வார்கள். அந்தக் கொல்லர்தான் அந்தப் புதையலுக்கு உரியவராம். அவர் குடும்பம் முழுவதும் கடலில் அமிழ்ந்து அழிந்துவிட்டது எதிர்பாராமல் குடும்பம் அழியும் என்பதை அறியாத அவர், புதையல் ரகசியத்தை அந்தக் கோயிலில் மறைத்து வைத்திருப்பார் என்று யூகிக்கிறேன். கதை, உண்மையோ பொய்யோ— அங்கே புதையல் இருப்பது உண்மை — "எழுவானுக்கும் தொழுவானுக்கும்'' என்ற பாடல் இருப்பது உண்மை- இந்தக் கல்லைக் கொண்டு போய், செப்பேட்டில் குறித்த இடத்தில் வைத்தால் புதையல் அகப்படுமென்றும் நம்புகிறேன்.''

"நீங்கள் முயற்சித்துப் பார்த்தீர்களா?''

"நான் எப்படி முயற்சிப்பது? முயற்சிக்கும் போது, திடீரென்று மலை மலையாகப் பொன்மணிகள் வெடித்து வந்து விட்டால், அவைகளை நான் எப்படிப்பாதுகாப்பது? நமது அரசாங்கம் நடந்தாலும், அவர்களிடம் கொண்டு போய் ரகசியத்தைக் காட்டி, புதையலைப் பொதுமக்களுக்குப் பயன் படுத்தச் சொல்வேன். சொன்னாலும் நடக்கும். நடப்பதோ அன்னியர் ஆட்சி! இது முடிந்து நமது ஆட்சி வரும் வரையில் எனக்கு ஆயுள் நீளும் என்பது சந்தேகம்தான்! அதனால்தான் எதுவும் புரியாமல் அலைகிறேன். யாரிடம் கொடுப்பது என்பது தெரியாமல் தவிக்கிறேன். துரை! இனிமேல் நான் அலைய வேண்டியதில்லை. ஆளைத் தேடவும் வேண்டியதில்லை. பொறுப்பான வாலிபன், நீ கிடைத்து விட்டாய். உன் தந்தை கண்டுபிடித்த சொத்து நீயே வைத்திரு பத்திரமாக! காலம் வரும் போது, இதன் உதவியைக் கொண்டு புதையலை எடு. அதைப் பொது மக்களுக்குப் பயன்படுத்தும் நிலை வரும்வரையில் காத்திருப்போம். என் காலத்தில் நல்ல அரசு மலரா விட்டாலும், உன் காலத்தில் மலராமலா போகப்போகிறது! அப்போது அந்த அரசிடம் இதை ஒப்படைத்து – நாடு செழிக்க, வழிவகுத்திடு! இந்தா இதைப் பிடி!'' என்று உணர்ச்சியோடு கூறிக்கொண்டு, மடியிலிருந்த செப்பேட்டையும் சிறு கல்லையும் எடுத்து துரையிடம் நீட்டினார் மாயாண்டி!

துரை, அதை வாங்குவதற்காகக் கை நீட்டினான். திடீரென்று பயங்கரமான சப்தத்துடன், ஒரு முரட்டு மனிதன் கொல்லைப்புறமிருந்து உள்ளே பாய்ந்தான். இவ்வளவு நேரமும் ஜன்னல் வழியாக இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த கரிய உருவமே அது!

முரடனின் கரத்திலே ஒரு கத்தி இருந்தது. முகத்திலே



## சக்கரவர்த்தி......

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டான் மாபாவி! அய்யோ லக்ஷ்மணா என்று கதறியது நானல்ல— அவனேதான்! நீ சீதையை விட்டு விட்டு வராதே!" என்று ராமனும் கத்தியிருக்கலாமே— அப்படிக் கத்தினால் அவர்கள் காதில் விழாது என்கிறீர்களா? மாரீசன் கத்தியது காதில் விழுந்து அலறும்போது, மாரீசனைப் போன்ற ஆயிரமாயிரம் அரக்கர்களை அழிக்கும் ஆற்றல் பெற்ற ராமன் கத்துவது மட்டும் அவர்கள் காதில் விழாமல் போய்விடுமா? மகா சக்தி வாய்ந்த ராமன், மாரீசனின் ஒலியைக்கூட சீதையோ, லட்சுமணனோ கேட்கவொட்டாமல் தடுத்திருக்கலாமே—ஏன் செய்யவில்லை? ஏன் கத்தவில்லை? 'சக்கரவர்த்தி திருமகன்' எழுதும் சக்கரவர்த்தியாரே, சரியான பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்.

"ஐயோ லட்சுமணா!" என்ற கூச்சலைக் கேட்ட சீதை, ராமனுக்கு ஆபத்து வந்ததாக எண்ணித் துடிக்கிறாள். லட்சுமணனை, உடனே ஓடச் சொல்கிறாள். அவன், "இது அரக்கர் மாயை—ஆகவே நான் போகத் தேவையில்லை" என்ற அநேக சமாதானங்கள் சொல்லுகிறான். இந்தக் கட்டத்தை ஆச்சாரியாரே வர்ணிக்கிறார் படியுங்கள்:

"ஜானகிக்கு உண்டானக் கோபமே கோபம்! வயிற்றில் இரண்டு கைகளாலும் அடித்துக்கொண்டு, "சுமத்திரையின் மகனே! சத்துருவாகி விட்டாயா? இவ்வளவு நாளும் வேஷம் போட்டாயா? ராமனுடைய மரணத்துக்கா இவ்வளவு நாள் காத்திருந்தாய்? அவன் இறந்தால் அவனுக்குப் பின் என்னை அடைந்துவிடலாம் என்று எண்ணி இத்தனை நாள் ஏமாற்றினாயா? துஷ்டனே, ராமன் கதறிக் கூவுவதைக் கேட்டும் போகாமல் இங்கே நிற்கிறாயே? அண்ணனிடம் நீ காட்டிக்கொண்ட பிரியமெல்லாம் பெருஞ் சூழ்ச்சியா? துன்மார்க்கனே!" என்றாள்.

"அண்ணன் ஆணை என்று சமாதானம் சொல்லி, அண்ணன் கதறிக் கூவினாலும் போகாமல் அவனைச் சாக விடுகிறாயா? ஆகா, உன்னை நம்பி என்ன மோசம் போனோம் ராமனும் நானும்! நீசனே! துஷ்டனே! ராமனுக்குப் பகையாய் வந்த வஞ்சகனே! ராமனுக்கு ஆபத்து வந்தது என்று மகிழ்ச்சி அடைகிறாயா? ஏமாற்றப் பார்க்கிறாயா? ராமனோடு நீ வனத்துக்கு வந்த நோக்கத்தை இப்போது நான் கண்டுகொண்டேன். அடே பாவி! பரதனுடைய தூண்டுதலா இது? எல்லாரும் என் நாயகனுடைய சத்துருக்கள் ஆகிவிட்டீர்களா? நீங்கள் எல்லாரும் சேர்ந்து என்ன செய்ய யோசிக்கிறீர்கள்? ராமனோடு வாழ்ந்த நான் உங்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பேனா? ராமன் இறந்த பிறகு ஒரு நிமிஷம் உயிருடன் இருக்கமாட்டேன், அறிவாய்!" என்றாள்.

(30—1—55-'கல்கி')

கொழுந்தனிடம் ஒரு குலமகள் பேசும் பேச்சா இது? அதுவும் சாதாரணப்பெண்ணா? மகாலட்சுமியின் அவதாரம், மகாபுருஷன் ராமனின் மனைவி—அவர்கள் பேசுகிறார்கள் 'அண்ணன் போனால், அண்ணியை அடையலாம் என்று எண்ணுகிறாயா?' எனக் கோபமாக!

சர்து முனையிலே சண்டை போடுவதைத் தொழிலாகக் கொண்ட நாலாந்தரப் பெண்மணிகூட தன் கொழுந்தனிடம் பேசக் கூசும் வார்த்தைகளை, சங்கு சக்கராயுதபாணியின் சம்சாரம் பேசுகிறார்கள் என்றால், அவர்களை எந்தப் பட்டியலிலே சேர்ப்பது?—அம்மையின் அருள் பாடும் ஆச்சாரியார் தான் பதில் சொல்லவேண்டும். விதி, அவர்களை அப்படிப் பேச வைத்தது என்பார் அவர். விதியைக் காரணம் காட்டுவதானால், ராவணன்கூட குற்றமற்றவனாகத்தான் ஆகவேண்டும்; சீதையை அவன் சிறையெடுத்ததும் விதியின் விளையாட்டுத்தான் என்று கூறி, ராவணனை ஆச்சாரியார் போன்றவர்கள் இழித்துரைக்காமல் இருந்துவிடலாம்.

"விதியோ விதி!" என்று 49-ம் அத்தியாயத்தில் புலம்பியவர்—"தெய்வம் எல்லா விதத்திலும் விபத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டது" என்று அதே அத்தியாயத்தில் கதறியவர்—53-ம் அத்தியாயத்தில்—

"மோகத்தாலும், மயக்கத்தாலும் தாம் செய்ய வேண்டியதை சமயத்தில் செய்யாமலும் — செய்யக் கூடாததைச் செய்தும் சீதையை இழந்தார்கள்"

20—2—55—'கல்கி')

ராம, லட்சுமணர்களை ஆச்சாரியார், அவரையுமறியாமல் எவ்வளவு கேவலமாகப் பேசுகிறார் பார்த்தீர்களா? — நாராயணன் அவதாரம் என்று ராமனுக்குத் தெரியாவிட்டாலும்— ஆச்சாரியாருக்குமா தெரியாமல் போய்விட்டது? அந்த நாராயண அவதாரத்தை நாக்கில் நரம்பின்றித் திட்டுகிறாரே, ஏன்?

மோகம்—
மயக்கம்—
செய்யக் கூடாததைச் செய்தல்—

கர்ணகடூரமான சொற்களால், கடவுள் அவதாரத்தை அர்ச்சிக்கிறார் ஆச்சாரியார். அதையே நாம் சொன்னால், தடை—படை எல்லாம் வருகின்றன. 'சடை கட்டும் நேரம்—காக பட்டர் கணக்கை சரிக்கட்டும் நேரம்—கட்டுண்டோம்—பொறுத்திருப்போம்' என்று நமக்கு நாமே ஆறுதல் கூறிக் கொள்ளும் வேளை—மிச்சமிருக்கும் சமயத்தில் ஆச்சாரியார்களுக்கு அகப்பட்ட வரையில் லாபந்தானே!

நடக்கட்டும் பிழைப்பு—எவ்வளவு நாளைக்கு என்று பார்ப்போம்! [தொடரும்]



**பிரிட்டன் தேர்தல்:** ஆளும் கட்சியைச் சார்ந்தவர் ஒருவர்தான் பேசுகிறார்! அரசாங்கத்துக்குச் சொந்தமான வானத்தைப்போல் விரிந்து கிடக்கும் மைதானத்தில் அல்ல; எல்லாக் கட்சிக்காரர்களும் கூட்டம் போடும் பொதுஇடத்தில்! இந்த நாட்டில்தான் நாடாளும் நேரு போன்றோருக்கு 'ஜிம்கானா கிரவுண்டு'ம், மற்றாக் கட்சிக்காரர்களுக்கு ஒதுக்குப்புறமும் அளிக்கப்படும் விநோதத்தைப் பார்க்கிறோம்!

## பிறைவானம்......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

னான்; உத்தமக் கொள்கைகள் சொல்லிய உயர் மனிதர்களை சந்தித்தான்; சிந்தித்தான்; முடிவில்......? முடிவொன்றும் செய்தான். 'ஒரே வழி—ஒப்பற்ற வழி' என்று முணுமுணுத்தான்! அந்தப் பிஞ்சு நெஞ்சத்தில் என்ன எண்ணம் தான் தோன்றிவிட்டது?

★

இரவு நேரம்! கடற்கரையை மறந்து-குடிசைகளைக் கடந்து—ஊருக்குள் புகுந்து-எங்கேயோ ஓடிக்கொண்டிருந்தான் குப்பன்! தந்தையோ வழக்கம்போல் கடலில் போய்விட்டார்; மகன் எங்கு போகிறான்? அதுவும் சாதாரணமாக அல்ல; வேகமாக—கோபமாக?

★

நடுநிசி! அந்த கும்மிருட்டில் ஒரு முறை கடற்கரைக்குச் செல்வோம்; அங்கே ஒரு திகைக்க வைக்கும் திடீர்ச் சம்பவம் காத்திருக்கிறது, நமக்காக!

அதோ, தூரத்தில் தெரிகிறது கள்ளத் தோணி. கரையை நெருங்கிவிட்டது. வழக்கம்போல் இரண்டு மூட்டைகள்-அப்பா இறங்குகிறார் அவைகளோடு!

ஆனால்...ஏதோ ஒரு 'விசில்' சப்தம் கேட்கிறதே! 'தடதட' வென்று பலர் ஓடிவரும் காலடியோசை கேட்கிறதே! ஒன்றும் தெளிவாகப் புரியவில்லையே, இந்த இருட்டில்! ஒரு விளக்கிருந்தால்...? அதோ, திடீரென்று விளக்கு தோன்றுகிறதே! 'பளீர்' என்று அடித்தது 'டார்ச் விளக்கு'! அந்த விளக்கொளியில்......என்ன ஆச்சரியம்! வரிசையாக நின்று-தோணியைச் சூழ்ந்துகொண்டிருந்தது போலீஸ் படை! நடுவிலே விலங்கு மாட்டிய கைகளோடு நின்றுகொண்டிருந்தார் அப்பா!

விபரம்புரிந்திருக்கலாமே! ஆனால் அதேசமயம் திடீரென்று ஒரு அழுகுரல் கேட்டது. விம்மல் எழும்பிய திசையை நோக்கித் தலையைத் திருப்பினார் அப்பா! "அப்பா!" என்று அலறினான் மகன்—அங்கு நின்றுகொண்டிருந்த குப்பன்!

அப்பாவின் கண்களில் நீர் கசிந்தது. போலீஸ் படை நகர்ந்தது. தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரியை அடைந்தது. அப்பா ஏற்றப்பட்டார்; எல்லோரும் ஏறிக்கொண்டார்கள். லாரி பறந்தது.

ஆனால்......குப்பன் எங்கே? கடற்கரையின் மணல் மேட்டிலே மீண்டும் உட்கார்ந்து விட்டான். வாய்விட்டுக் கதறுகிறான். அந்த நடுநிசியில் அவனது அழுகுரல் கேட்கிறது, 'ஏ, கடலே! நீ சொல்; நான் செய்தது தப்பா? நான் செய்தது தப்பா?' என்று. நான் கேட்கிறேன் உங்களை, நீங்கள் சொல்லுங்கள், "குப்பன் செய்தது குற்றம்தானா?"

—சொர்ணம்

# சீட்டாட்டம்

முல்லை சக்தி

"சாவித்திரி! எழிற்காவியமே! உயிர் ஓவியமே! என் துயரை போக்கமாட்டாயா? உன் பட்டு மேனி என்னை சுட்டெரிக்கிறது! வட்ட நிலவு முகம் என்னை வாட்டி வதைக்கிறது! கொல்லாமல் கொல்கிறது உன் முல்லைப் பற்கள்! கனவுக் கண்கள் என் மனதைப் புண்ணாக்கி என் எண்ணத்தை யெல்லாம் உன் பால் இழுக்கிறது! அமுதூறும் உன் இதழை சுவைக்க துடிக்கிறது என் உள்ளம்! உன் தளிர்க் கரங்களைப் பற்றி குளிர்மலர் சோலையில் உலாவும் நாள் எந்நாளோ? பெற்றோரும், உற்றாரும் மகிழ-தோழர்கள் யெல்லாம் வாழ்த்த - உன் கழுத்தில் பொற்றாலி கட்டும் பாக்கியத்தை நீ எனக்கு அருள மாட்டாயா? என் வாழ்வின் திருவிளக்கே! அணைத்துவிடாதே என் இதய ஜோதியை! இணைந்து வாழ்வோம் நாம். பேசும் சித்திரமே-சித்தம் இரங்கம்மா-இல்லை என்றால் பித்தம் பிடித்து—புவியில் புலம்பி புலம்பி மடிந்து விடுவேன். வாழ்க்கை வானில்—இன்ப கீதம் இசைக்கும் வானம்பாடிபோல பறப்போம். என்னுயிரே! உன் கனிமொழியால்பனிப்பார்வையால் என் கவலையைப் போக்க மாட்டாயா? இதயராணி! உன் இதயத்திலே எனக்கு இடம் இல்லையென்றால் இந்த அகிலத்திலும் எனக்கு இடம் இல்லை. என் உள்ளத்தைக் கவர்ந்தவளே! உன் உள்ளத்தை தொடமுடியாத நான் இந்த உலகில் வாழமுடியாது. ஏழை என்று எண்ணாதே ஏந்திழையே! ஏழடுக்கு மாளிகை மட்டுமல்ல; ஏழையின் குடிசையிலேகூட கொடி முல்லை பூக்கும்-தென்றல் வீசும்-வெண்மதி தண்ணொளி பாய்ச்சும். உன் விழிகளிலே நீர்வழியாமல், உன் முகம் வாடாமல், உன் அகம் நோகாமல் இந்த சகத்தில் உன்னைக் காப்பாற்றுவேன். என் சாகாமருந்தே—சாகடித்து விடாதே என்னை! தேன் மலரே! உன் இதழ் விரித்து என் இதயம் மகிழ ஒரு சொல் சொல்லமாட்டாயா? சாவித்திரி! புவியில் உன்னையன்றி வேறுயாரும் இல்லை எனக்கு! நீயே தான் என் வாழ்வு-உயிர்-எல்லாம். கொன்று விடாதே என்னை; கூறு போட்டு விடாதே என் வாழ்வை; பொற்பாவையே! உன் சொற்களிலே ஊசலாடுகிறது என் உயிர்......"

"மூர்த்தி! மோக மயக்கத்திலே வார்த்தைகளை கோர்த்து விட்டாய். உன் மனதை நோகச்செய்ய விரும்பவில்லை நான்; என்றாலும் உண்மையை உரைக்கத்தானே வேண்டும்.

"செல்வ நாதரின் சிங்காரத் தோட்டத்தில் பூத்த மலர் நான்—அந்தஸ்து என்ற அரணையும், கௌரவம் என்ற காவலையும் மீறி உன்னால் என்னை எப்படிப் பறிக்க முடியும்? தொட்டுப் பார்க்கக்கூட உன்னை அனுமதிக்க மாட்டார்களே. எட்டி நின்று ரசிக்கலாம்-பெருமூச்சு விடலாம்-ஆனால் உரிமையாக்கிக் கொள்ள முடியாதே. சீரும், சிறப்பும், சிங்கார வாழ்வும் என் பிறப்புரிமைகள். பேரும் புகழும் என் குடும்பத்தின் சொத்துகள். ஊர், பேர் தெரியாத உன்னை மணந்து கொண்டால் உலகம் எள்ளி நகையாடாதோ! மாளிகை மலர்க் கொடி குடிசையிலே படர்ந்தாலும், செழிப்பாக வளராது மூர்த்தி.

"செல்வத்தின் தொட்டிலிலே வளர்பவள் நான்......வறுமையின் நிழலிலே நான் எப்படி வாழ முடியும்?"


"இன்பமே! என் இதயத் தொட்டிலிலே வைத்து உன்னைத் தாலாட்டுவேன். என் அன்பால் உன்னை அர்ச்சிப்பேன். பாசத்தால் பரவசப் படுத்துவேன்"

"பொன்னகை பூட்டி மகிழ்ந்தவள் நான்—உன் புன்னகை மட்டும் போதாது......மூர்த்தி! வேண்டாம்-பழகின தோஷத்திற்காக கூறுகிறேன்-என்னை மறந்துவிடு... உனக்கு ஏற்றவளை தேடிக் கொள். எட்டாத பழத்திற்கு கொட்டாவி விடாதே. எட்டாத நிலவு - கிட்டாத தேன் - நான் உனக்கு"

"சாவித்திரி! உன் முடிவு இது தானா? அந்தஸ்து-கௌரவம்... என்ற படி ஏறி உன்னைப் பிடிக்கிறேன். சிறிது காலம் கொடு... அந்தஸ்தையும்- கௌரவத்தையும் என் அடிமையாக்கிக் கொண்டு பணம் என்ற எடுபிடிகளோடு வருகிறேன். செல்வச் செருக்கால்-அந்தஸ்து அகந்தையால்-கௌரவ போதையால்-என் மனதைப் புண்ணாக்கி விட்டாய். என் தூய உள்ளத்திலே விஷப் புயலை கிளறி விட்ட உன்னை-என் ஏழ்மையை பரிகசித்த உன்னை-என் இதயம் வலிக்க வலிக்க வார்த்தைகளை வீசிய உன்னை-என் அன்பைஅலட்சியப் படுத்திய உன்னை-அதே பணத்தால் பணியவைத்து என் காலடியில் விழச் செய்கிறேன்...... நான் வருகிறேன்......"

* *

மூர்த்தி சொல்லிக் கொண்டே புறப்பட்டான். வாட்டமும், வேதனையும் ஆலவட்டம் சுற்றின, சாவித்திரியின் முகத்தில்! ஒரு முடிவோடு சென்றான் மூர்த்தி. எப்படியாவது பணத்தை சம்பாதித்து அந்தப் பளிங்கு மேனியாளை அடிமையாக்கிக்கொள்வது என்ற முடிவோடு சென்றான். இரவு, பகல் என்று பாராமல் உழைத்தான்; உழைத்தான். ஆனால் அவனின் இலட்சிய தொகையை அடைய முடியவில்லை. சோர்வில்லாமல் உழைத்தான். ஆனால் செல்வம் சேரவில்லை. இந்தப் பரந்த வையகத்தில் உழைப்பவர்களுக்கு எங்கே ஊதியம் கிடைக்கிறது! நெஞ்சு எலும்பு முறிய பாடுபடும் பாட்டாளிக்கு பசியாற உணவே கிடைப்பதில்லையே! வஞ்சகர்களும், கல்நெஞ்சர்களும், எத்தர்களும்தானே செல்வத்தை குவிக்கின்றார்கள்! உண்மை உழைப்பாளிகள் உழைத்து உழைத்து, மற்றவர்களைத் தழைக்க வைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் பிழைப்பதற்கேவழியில்லை. தொழிலாளர்களின் இரத்தத்திலே நீச்சலடிக்கிறார்கள் முதலாளிகள்! மூர்த்தி மட்டும் அதற்கு விதிவிலக்கா? வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி சிறிது பணம் சேர்த்தான். காலமுழுதும் உழைத்தாலும் சாவித்திரியைப் பெறும் அளவுக்கு செல்வத்தை சேர்க்க முடியாது என்பதைஉணர்ந்தான். குறுக்கு வழியில் பணத்தை சம்பாதிக்க முற்பட்டான். தன் கரங்களிலே இருந்த வலிமையையும், நெஞ்சிலே இருந்த நேர்மையையும் மறந்தான். எந்த முறையிலாவது பணம் சம்பாதிக்க வேண்டும்; சிந்தையில் குடியேறியவளைத் தன் காலடியில் விழச் செய்ய வேண்டும் என்பதுதான் அவனின் குறிக்கோள்.



குறுக்கு எழுத்துப்போட்டியும், ஒன்று, இரண்டா கூப்பன்களும், குதிரைப் பந்தயமும், காட்டன் சூதாட்டமும் அவனின் கண்களைக் கவர்ந்தன. அகராதிகளைத் துருவித் துருவி வார்த்தைகளை பூர்த்தி செய்வான். பலன் மட்டும் என்னவோ பூஜ்யம் தான்! ரோஸ் - பம்பாயில் முதல் பரிசு பெற்றிருக்கிறது; மைசூரில் இரண்டாம் பரிசு பெற்றிருக்கிறது; இங்கேயும் முதல் பரிசு கட்டாயம் ரோசுக்குதான் — என்றெல்லாம் நினைத்து பணம் கட்டுவான். ஆனால் ரோஸ் மூன்றாவதாகக்கூட ஓடிவராது. காட்டன் சூதாட்டத்திலும் அவனுக்குத் தோல்வியே இந்த சூதாட்டத்தில் பணம் தான் விரையமானதேதவிர பலன் ஒன்றும் இல்லை. சோர்ந்து போனான் மூர்த்தி. எஞ்சியிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு, சீட்டாட்டத்தில் தன் கைவரிசையைக் காட்டப் புறப்பட்டான்.

ஊருக்கு அப்பால்-ஒரு ஒதுக்குப் புறத்தில்தான் அந்த 'கோஷ்டி' கூடுவது. கதவுகள் எல்லாம் பூட்டப்பட்டு-வெளியில் இரு கவல்காரர்களையும் நிறுத்தி வைத்துவிட்டு - மணிக்கணக்காக அல்ல; நாள் கணக்காக நடக்கும் 'கச்சேரி'யில் கலந்துகொள்ளப் போனான் மூர்த்தி. 'இதைவிட வேறு வழியில்லை. பார்ப்போம்; ஜெயித்தால் சாவித்திரி நம் காலடியில்-இல்லை என்றால் உடல் ஒரு முழக்கயிற்றில்' என்ற முடிவோடு போனான். கரன்சி நோட்டுகள் கட்டுக் கட்டாக சதிராடும் பயங்கரமான சூதாட்டம்! அந்தப் புகைசூழ் குகையில் புகுந்து விட்டான் மூர்த்தி. இரவு—பகல் ஓயாமல் ஆடினார்கள். பீடி-சிகரெட் புகை மண்டலத்திடையே அவர்களின் ஆட்டமும் நடந்து கொண்டிருந்தது. சோடா பாட்டில்களும் — வெத்திலை பாக்கும் — துண்டு பீடிகளும்-சாப்பிட்ட இலைகளும்—சாப்பிடாமலிருந்த பலகாரங்களும்-அந்த அறை முழுதும் சிதறியிருந்தன. ஊண்-உறக்கம் எல்லாவற்றையும் மறந்து ஆடினர். மூர்த்தியின் பக்கம் வெற்றியின் ஏகப் பார்வை திரும்பியது; பணம் குவிந்து கொண்டேயிருந்தது. 100, 500, 1000 என்ற கணக்கில்! இடைவிடாமல் இரண்டு நாட்கள் ஆட்டம் நடந்துகொண்டேயிருந்தது. மூர்த்தியிடம் பணம் சேரச் சேர மற்றவர்களின் பொறாமைக் கண்கள் அவன்மேல் பாய்ந்தன. பணத்தை சுருட்டிக் கொண்டு புறப்பட்டான் மூர்த்தி. கண் சிமிட்டிக் கொண்டனர் மற்றவர்கள்.

ஒரே ஓட்டமாக ஓடினான். தன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினான். இருட்டிலே-இரவின் கொடுமையிலே - கால் கடுக்க ஓடினான் சாவித்திரியின் வீட்டை நோக்கி. பளபளக்கும் கத்தியைக் காட்டிக்கொண்டே அவனது 'சகாக்க'ளில் ஒருவன் துரத்தினான். அந்த வேட்டை நாயிடமிருந்து தப்பிக்க ஓடினான்; அந்த நாயும் வேகம் குறையாமல் துரத்தியது. மூச்சுஇரைக்க சாவித்திரியின் வீட்டுக் கதவைத் தட்டினான் மூர்த்தி! தட்டினான்; தட்டினான். கதவு திறக்கப் படவில்லை. அர்த்த ராத்திரியில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர் அனைவரும். துரத்திவந்தவனும் நெருங்கினான். "டேய் மூர்த்தி-பணத்தைக் கொடுத்துவிடு; இல்லையேல் சுடுகாட்டுக்குப் போகவேண்டிவரும்..."

"முடியாது- இது நான் ஜெயித்தது"—இது மூர்த்தியின் குரல்.

"ஆ! அப்படியா?" என்று கூறிக்கொண்டே கத்தியால் குத்தினான். மூர்த்தி "ஐயோ! சாவித்திரி" என்றலறினான். கொட்டிய குருதியைக் கண்டதும் ஓடிவிட்டான் அந்தப் பாதகன். சத்தத்தைக் கேட்டு வெளியே ஓடிவந்தாள் சாவித்திரி. விளக்குகள் போடப்பட்டன. குருதி வெள்ளத்தில் மிதந்தான் மூர்த்தி. "சாவித்திரி. இதோ நீ விரும்பிய பணம் - இதை சம்பாதிக்க என் உயிரையே பணயமாக்கிக் கொண்டேன்...... நான் சாகப் போகிறேன் - சாவித்திரி - நான் சாகிறேன்! உன்னை அடைந்து—இன்ப வானில் உலாவலாம் என்று எண்ணியிருந்த என் எண்ணம்-என் ஆசையெல்லாம் பாழாகி விட்டது. உழைக்காமல் சம்பாதிக்க முயற்சித்த எனக்கு சரியான தண்டனைதான். சாவித்திரி! உன் அன்பைப்பெற பொன்னும், மணியும் கேட்டாய்! இதோ என் குருதி வெள்ளத்தில் குளித்து-மகிழ்ந்து-இந்தப் பணத்தால் பொன் ஆபரணங்களைப் பூட்டிக்கொள். நான் போகிறேன், சாவித்திரி......நான் போகிறேன்..." —மூர்த்தியின் மூச்சு அடங்கியது. அவன் கையில் இருந்த கத்தை நோட்டுகள் காற்றிலே பறந்தன. சாவித்திரியின் கண்கள் நீரைக் கொட்டின! அந்த கண்ணீர் வெள்ளம் மூர்த்தியின் இரத்தத்திலே கலந்தது! ஃ

## வருந்துகிறோம்

சேலம் மாவட்ட தி.மு.க. செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் அன்னை பார்வதியம்மாள் சென்ற 20-5-55 இரவு 9-மணிக்கு தமது 116-வது வயதில் இயற்கை எய்தினார்கள். இச்செய்தி கேட்டு மிக வருந்துகிறோம்.

## கொள்கை வளருது கோபுரம் போலே!

## அறிஞர் அண்ணா

### நிகழ்ச்சிகள்

ஜூன் 3: திருவாரூர்
[மாலை 6 மணிக்கு தி. மு. க. பொதுக் கூட்டம்]

4: விழுப்புரம்
[இரவு எம். ஜி. ஆர். மன்றத்தின் நாடகத்திற்குத் தலைமை]

**சென்னை**

[வண்ணாரப் பேட்டை கல்லறை மைதானத்தில்]

4—6—55

பேசுவோர் :
என் வி. நடராசன்
சி. பி. சிற்றரசு
விருதை ராமசாமி

**வலங்கை**

(கடைத்தெரு அருகில்)

5—6—5, மாலை 6 மணி

பேசுவோர்:
தாமரைச்செல்வன், பத்மநாபன்

**மதுரை**

[இளங்கோ மன்ற மூன்றாவது ஆண்டு விழா]

5—6—55, மாலை 6 மணி

பேசுவோர் :
தில்லை க. அறிவழகன்
மதுரை முத்து
பி. கே. சேதுராமன்
கே. எஸ். சந்தானம்

**கவசம்பட்டு**

7—6—55

மாலை 6-மணி

பேசுவோர் :
சம்பத்
போளூர் சுப்ரமணியன்
முல்லை சத்தி

---

### சென்னை பொதுக்கூட்டம்

"24-5-55 செவ்வாய் மாலை 6 மணிக்கு கோகலே மண்டபத்தில் நடந்த சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர்கழகத்தை **தாடிக் கழகம்** என்று கூறியதாக 26-5-55 தினத்தந்தி இதழில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது; அவதூறானது; தினத்தந்தி இதற்கு மன்னிப்புக் கோரவேண்டும்" என்று தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் அன்றே "நம் நாடு" இதழில் வெளியிட்ட மறுப்பறிக்கைக்கு, இதுவரை தினத்தந்தியிடமிருந்து யாதொரு பதிலும் கிடைக்காததால்-தினத்தந்தியினுடைய இந்த இழிந்த போக்கினை, பொதுமக்கள் உணர்ந்து கொள்வதற்காக 4—5—55 சனிக்கிழமை மாலை வண்ணாரப்பேட்டை கல்லறை மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், "டேப் ரிகார்டு" செய்யப்பட்டுள்ள அண்ணாவின் கோகலே மன்றப் பேச்சு ஒலிபரப்பப்படும் என்று சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

---

### சுழல் விளக்கு......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

வதற்கென்றே வாய்ப் பறையடிக்கும் சிலரைப் பார்க்கும்போது கடவுளைக் காட்டுவதாக நடித்த பக்த சிரோண்மணிகளின் நினைப்பு தான் வருகிறது.

டெல்லியிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையிலே ரெயில்வே உதவி மந்திரி ஓ. வி. அளகேசன் "தமிழில் புதுச் சொல் செய்தல்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார்!

ரெயில்வே அமைச்சர் புதுச் சொல் செய்யப் போகிறாராம்! "எங்கே செய்யப் போகிறார்? தன்னுடைய இலாக்காவுக்குச் சொந்தமான பெரம்பூர் கோச் பாக்டரியிலா?" என்று கேட்டுவிடாதீர்கள்!

(தமிழ் மொழி) "கிழமாகவும், நொண்டியாகவும் போகாமல், ஓட்டம், துள்ளல் போட்டு நடக்க வேண்டும்" — இப்படி எழுதுகிறார் அளகேசன்.

தமிழிலே ஓட்டம் இல்லையாம்! துள்ளல் இல்லையாம்! தமிழ் கிழமாகி விட்டதாம்!

டெல்லி வட்டாரத்திலே இந்திக் கிழத்தோடு பழக நேர்ந்த காரணத்தால்தான் மந்திரியார் இப்படி ஏதேதோ கிறுக்கித் தள்ளிவிட்டார்! 'சீரிளமைத் தமிழ்'மீது சீறிப் பாய்கிறார் — சீர்திருத்தம் என்ற காரணம் காட்டி!

இதோ, அவர் சொல்லும் சீர்திருத்தம்! சிரிக்காமல் கொஞ்சம் அமைதியாகப் படியுங்கள்!

'கோபம்' என்ற சொல்லிலிருந்து 'கோபித்தல்' என்ற சொல் வழங்குவதைப்போல், 'வேகம்' என்ற சொல்லிலிருந்து 'வேகித்தல்' என்ற சொல்லை ஏன் உண்டாக்கக் கூடாது? — இப்படிக் கேட்கிறார், அவர்!

'வாதம்' என்ற சொல்லிலிருந்து 'வாதித்தான்' என்ற சொல் தோன்றியிருப்பதுபோல, 'கீதம்' என்ற சொல்லிலிருந்து 'கீதித்தான்' என்று ஏன் புதுச் சொல் தயாரிக்கக் கூடாது?

'உதை-உதைத்தான்'—'விதை-விதைத்தான்' என்பது போல 'கதை கதைத்தான்' என்று ஏன் கூறக் கூடாது? 'ஊரில் மழை பெய்ததா?' என்பதற்குப் பதிலாக, 'ஊரில் மழைத்ததா?'—என்று ஏன் கேட்கக் கூடாது? 'வம்பு பேசினான்' என்பதற்குப் பதிலாக, 'வம்பினான்' என்று ஏன் சொல்லக் கூடாது?-இப்படியெல்லாம் ஒரு கட்டுரை 'கட்டித்திருக்கிறார்', ஓ. வி. அளகேசன்!

அய்யா மந்திரியாரே! ஆழந் தெரியாமல் காலை விடாதீர்கள். தமிழில் புதுச் சொல் வழங்க தமிழறிஞர்கள் பலர் தயாராகஇருக்கிறார்கள். நீங்கள் ஏன் அனாவசியமாக திட்டங்கள் 'திட்டித்து', இருக்கிற பெயரை கெடுத்துக் கொள்கிறீர்கள்? உங்கள் வேலையை சரிவரக் கவனியுங்கள்—அதுவே போதும்!

மூன்றும் வகுப்புப் பெட்டிகளிலே மூட்டைப் பூச்சிகள் டிக்கட் வாங்காமல் இனமாகப் 'பிரயாணித்து'க் கொண்டிருக்கின்றன. ரெயில்களெல்லாம் மாமியார் வீட்டுக்கு வருவதைப் போல தாமதமாக 'வந்திட்டுக்' கொண்டிருக்கின்றன!

பற்பல இடங்களில் இன்ஜின்கள் குடை சாய்ந்து 'விபத்திட்டுக்' கொண்டிருக்கின்றன!

தமிழ் சீர்திருத்தத்தை அறிஞர் ஏறுகளிடம் ஒப்புவித்து, நீங்கள் இந்த வேலைகளைச் சரிவர 'செய்திட்டு' வரக்கூடாது?

ஒரு சில ஆங்கிலப் புத்தகங்களை தமிழ்ல் 'மொழித்திட்ட'தாலேயே தமிழறிஞராகி விட முடியுமா?

மொழி 'வளர்ச்சித்த'லுக்காக நாளெல்லாம் பாடு படும் மந்திரி யாரே! நான் சொல்வது 'புரித்ததா?' (புரிந்ததா என்பதற்கு இது புதுச் சொல் என்று கொள்க. தயவு செய்து 'சிரிப்பித்தல்' வந்தால் அதை 'அடக்கித்தல்' செய்க.)

ஃ

---

### கொக்கரித்த குரல்......

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

சியால் 'ஷின்பேன்' இயக்கம் நாட்டிலே முளைவிட்டது. தாயின் தளை உடைக்க வாலிபப்பட்டாளம் அந்த இயக்கத்திலே அணிவகுத்து நின்றது.

1937-ம் ஆண்டில் 'அன்னையைக் கூறுபோடாதே' என்று விண்முட்டும் அளவுக்கு குரல் கொடுத்த கூட்டம் அவர்கள் தான்! இன்னும் அவர்கள் குரல்வளையை நெறிப்பதற்குத் தான் ஏகாதிபத்யம் காத்திருக்கிறது. இப்போது நாம் சொல்ல இருக்கும் செய்தியும் அவர்களைப் பற்றிதான்!

வழக்கமாக வட அயர் பதி மூன்று பேர்களை ஆங்கிலப் பார்லிமெண்டிற்கு அனுப்பி வைக்கும். இந்தத் தடவை அவைகளில் பத்து ஸ்தானங்களுக்கு ஷின்பேன் இயக்கத்தார் அபேட்சகர்களை நிறுத்தி வைத்தார்கள்.

பத்துபேரும் வெற்றி மாலை சூடுவார்கள்—என்பதல்ல அவர்கள் நோக்கம்!

உரிமை முரசு தட்டிக் கொண்டிருப்போர் உறங்கிவிடவில்லை என்று ஆங்கிலத்துரைகளுக்கு அறிவிப்பதுதான் அவர்கள் கொண்ட தலையாய கருத்து!

பத்துபேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், **செய்தி கிடைத்த உடனேயே பெற்ற பதவியை ராஜிநாமா செய்து விடுவது—அதன் மூலம் அன்னிய ஆங்கிலப் பார்லிமெண்டை அவமதிப்பது**-என்பது தான் அவர்கள் தீட்டிவைத்திருந்த திட்டம்.

இப்போது அவர்களில் இருவர் வாகை மாலை சூடிவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

யார் தெரியுமா அவர்கள்?

புது மீசை அரும்பியிருக்கும் பருவம்! பூங்காவிலே காதல் கிழத்தியரைக் கொஞ்ச வேண்டிய வயது!

டாம் மிட்செல்-பிலிப்கிளார்க்—*என்பதுதான் அவர்கள் பெயர்! மிட்செல் கொத்துவேலை பார்ப்பவர்-வயது 23! கிளார்க் பெயருக்கேற்றபடியே ஒரு 'கிளார்க்'—குமாஸ்தா-வயது 21!*

*தேர்தலிலே வெற்றி கண்ட இன்பச் செய்தி அவர்களைத் தேடி வந்தபோது அவர்கள் எங்கிருந்தார்கள் தெரியுமா?*

*மயில் தோகையின் அழகு நிகர்த்த மங்கையரின் மடியிலா?*

*நிலா நீந்தும் வானத்தின் அடியிலா?*

*இல்லை; இல்லை.*

*ஆந்தைகள் அலறும் சிறைச்சாலையில்! கோட்டானின் கூக்குரல் காதுகளைத் துளைக்கும் காராக்கிரகத்தில்!*

*தாயைத் துண்டாடியவர்களின் பிடரி பிளக்க ஆர்வத்தால் உந்தப்பட்டு, அவர்கள் பயங்கரவாதிகளாக மாறி விட்டார்களாம்!*

*சட்டம் அந்த வீரர்களுக்கு பத்து ஆண்டு சிறைத் தண்டனையைப் பரிசாக வழங்கியிருக்கிறது. பருவத்தின் எழில் துள்ளும் வாலிபப் பூங்காவிலிருந்து பனி படிந்த பத்து ரோஜாக்களை கிள்ளியெறிந்து விட்டது! தாயின் மார்பிலே விடுதலை மாலையை அணிவிக்க பத்து ஆண்டுகளை, அந்தத் தீரர்கள் தத்தம் செய்து விட்டார்கள்!*

*வட அயர்லந்து மக்கள் இந்தத் தடவை ஆங்கில அரசாங்கத்தின் மொழியிலே 'இரு கைதி'களைத் தங்கள் பிரதிநிதிகளாக இலண்டன் மாநகரத்துப் பார்லிமெண்டிற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!*

*அந்தோ, பரிதாபம்! 'மிட்செல்; கிளார்க்—'கேர் ஆப்' மாட்சிமை தங்கிய மன்னர் பிராட்டியாரது சிறைச்சாலை, பெல்பாஸ்ட், வட அயர்லந்து'—என்னும் அவர்களுடைய முகவரி காரணமாக, விடுதலை வெறிபிடித்த வீரர்கள் இருவரும் தங்கள் அங்கத்தினர் பதவியை இழக்க இருக்கிறார்கள். ஏனெனில் ஆங்கிலச் சட்டத்தின் கீழ் கைதிகளுக்கு பாராளுமன்ற அங்கத்தினராகும் உரிமை கிடையாதாம்!*

*அன்று ஒரு உல்ப்டோனின் உடலை தூக்கு மரத்திலே ஊசலாட விட்டார்கள்! இன்று அவன் உயிர் குடித்த தூக்கு மேடையைக் குறியாக வைத்து வட அயர்லாந்திலே கொக்கரிக்கும் உரிமைக் குரல் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் காதுகளை செவிடாக்குகிறது.*

*ஷின்-பேன் இயக்கத்திற்கும் இன்று திராவிடத்திலே வளர்ந்து வரும் நமதியக்கத்திற்கும் ஒற்றுமைகள் அதிக அளவு இருந்தாலும், வேற்றுமையும் நிரம்ப இருக்கிறது.*

*இலட்சியம் ஈடேற அவர்கள் ஆயுதங்களைத் துணைக்கழைக்கிறார்கள்—பலாத்காரத்தை பாதை காட்ட அனுமதிக்கிறார்கள்.*

*அதன் காரணமாக ஷின்—பேன் இயக்கத்தில் பெரும்பான்மையோர் பயங்கர வாதிகளாகத் தோற்றமளிக்கின்றனர். நாமோ இன்னும் பயங்கர வாதிகளாக மாறவில்லை; ஏனெனில் நமக்குக் கிடைத்த தலைவர்கள் ஜனநாயகத்தின் தூண்கள்! அறப்போராட்டம் கண்ட பெருந்தகையாளர்கள்!*

*ஷின்-பேன் இயக்கத்தின் கருவாக இருக்கும் 'நமக்கு—நாமே' என்கிற தத்துவம், நமது இயக்கத்தின் மூல மந்திரமாக இருக்கட்டும்! கொக்கரிக்கும் நமது குரல் டெல்லி மூலவர்களின் காதுகளைக் குடையட்டும்!*

**—மாறன் பி. ஏ. (ஹானர்ஸ்)**

# பிறை வானம்

பிள்ளைகள் பகுதி...



## ★ குற்றம்தானு? ★

சிறு கதை

இரவு நெருங்கிவிட்டது. கடற்கரையின் தனிப் பகுதி. அதிலே ஒரு மணல் மேடு. அதன்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தான் ஒரு சின்னத்தம்பி. 'அவனது கைகள் இரண்டும் கன்னத்தில் இருந்தன. கண்கள் இரண்டும் எதிரே பரந்து கிடந்த பெருங்கடலின் மேல் இருந்தன; அங்குமிங்கும் ஓடக் கொண்டிருந்தன. அலை ஓசை - அந்த ஓயாத இயந்திரத்தின் உறுமல் கேட்டுக்கொண்டேயிருந்தது.

தம்பியின் முகத்தில் தெளிவு இல்லை; கவலை தெரிந்தது. கண்களிலே களிப்பைக் காணும்; பரபரப்பு காணப்பட்டது. அடிக்கடி கடலின் மேல் உற்று உற்று பார்த்துக் கொண்டிருந்தான். ஆனுல், பாவம், அவன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த அந்த 'ஏதோ ஒன்று' அவன் கண்களில் அகப்படவேயில்லை. அவன் எதைத்தான் தேடுகிருன்? ஏன் இப்படி வாடுகிருன்?

அவன் அப்பா, காலை நேரத்தில், சூரியன் எழும்புவதற்கு முன்பே, தோணி எடுத்துக் கடலில் இறங்கியவர். 'முத்துக்'கள் எடுக்க அல்ல; மீன் பிடிக்க. ஆனுல், இரவுவரை அவர் திரும்பவேயில்லை என்ருல்...? மகனின் மனம் பதறத்தானே செய்யும்? அதுவும் அவன், தன் தந்தையின் 'அந்தப் பாதை'யில் செல்லாதவன். ஆமாம்; கடலில் குதிக்கும் தொழிலில் ஈடுபடாதவன். நீதியின் மேல், நேர்மையின் மேல், அன்பின் மேல், அறத்தின் மேல், இவைஎல்லாம் சொல்லும்தமிழின் மேல் அளவில்லா ஆவல் கொண்டவன். கல்விப்பித்துக்கு 'அணையிட'வில்லை அவன் அப்பா; ஆகவே நீர்க்கடலை வெறுத்து 'கல்விக்கடலி'ல் குதித்தவன். அவன் மனம் பட படப்பதில்-பதை பதைப்பதில் என்ன ஆச்சரியம்? "அப்பா எங்கே? அவர் ஏறிச் சென்ற தோணி எங்கே? இன்னும் திரும்பாதது ஏன்? ஒரு வேளை......நடுக்கடலில் புயல் அடித்து...தோணி கவிழ்ந்து...... சுராவுக்கோ, திமிங்கிலத்துக்கோ ...என் அப்பா...? அப்பப்பா! என்ன நினைவு! பொல்லாத கற்பனை!..." என்று முணுமுணுத்தது அவன்வாய். நேரம் நில்லாமல் சென்றது.

நடுநிசி! தம்பி நகரவேயில்லை; காத்திருந்தான்.

சற்று நேரம் சென்றது. அவன் திடீரென்று எழுந்தான். கண்கள் மலர்ந்தன. ஆமாம்; அதோ, அவன் கண்களில் தென்பட்டு விட்டது அப்பாவின் தோணி. தம்பி குதித்துக்கொண்டே கடலை நோக்கி ஓடினுன். "ஓ...குப்பா! ......அதோ அப்பா வராப்புலே இருக்கு......ஓடியா...ஓடியா...!" என்று தூரத்துக் குடிசையிலிருந்து அவன் அம்மா எழுப்பிய குரல் கூட காதுகளில் விழவில்லை. அவன் ஓடினுன். (முன்பே சொல்லவில்லையே - அந்தத் தம்பியின் பெயர்தான் குப்பன்)

கடலை நெருங்கினுன். தோணி கரையைத் தொட்டு விட்டது. அப்பாதான் இறங்கினுர். குப்பனுக்குக் கொள்ளை மகிழ்ச்சி! ...ஆனுல்...ஆனுல்...என்ன இது? ஏன் அவன் முகம் இப்படி மாறுகிறது? எதைக் கண்டு அவன் மனம் மீண்டும் மருள்கிறது? கவனிப்போம். அதோ, அவன் தந்தை! அவருக்குப் பக்கத்திலே ...பயங்கர மனிதர்கள் யாருமல்ல; ...ஆனுல், ஏதோ இரண்டு பெரிய சாக்கு மூட்டைகள்! பயந்தபடியே அவைகளை இறக்கினுர் அப்பா! என்ன மூட்டைகள் அவைகள்? சாதாரண சாமாளுக இருந்தால் அவர் அப்படி பயப்படுவானேன்? திரு திரு வென்று விழிப்பானேன்? ஆமாம்; அவை கள்ளச்சாமான்கள்! இலங்கையிலிருந்து கடத்தி வந்த மூட்டைகள்!

குப்பனுக்கு 'குப்'பென்று வியர்த்தது உடல். "அப்பா!" என்ருன் ஆத்திரத்துடன்-அவசரத்துடன்.

"உஷ்! சப்தம் போடாதே குப்பா!......யாராவது பார்த்து விட்டால்......?"-அப்பா அவனது வாயைப் பொத்தினுர்!

அப்போது மட்டும் தான் வாயை மூடிக் கொண்டான் குப்பன்; ஆனுல் குடிசை திரும்பியதும் அப்பாவை சும்மா விட்டு வைக்கவில்லை. 'ஏன் இந்தப் பிழைப்பு?' என்று கேட்டான்; 'தவறு; பெரும் தவறு' என்று தீர்ப்பளித்தான்;'வேண்டாமப்பா; விட்டுவிடுங்கள்' என்று புத்தியும் சொன்ஞன்.

குறுக்கு வழியிலே பணம் சேர்க்கத் திட்டமிட்ட அந்த அப்பாவா கேட்பார்? ஊஹூம்! பலனில்லை; தினம் தினம் நடந்தது அவரது திரை மறைவுத் திருட்டு!

குப்பன் என்ன செய்வான்? பாவம், மனம் புழுங்கினுன்; வேதனையால் வாடினுன்; 'என்னதான் செய்வது இந்த அப்பாவை?' என்று கலங்கினுன்; "இந்த நாடகத்துக்கு ஒரு முடிவு இல்லையா? என்னை உயிரோடு கொல்லும் இந்த வேதனைக்கு ஒரு எல்லை இல்லையா?" இப்படிப் புலம்பினுன்; புத்தகங்களைப் புரட்டி

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

## கேள், தம்பி!

தம்பீ, உன்னைத்தான் — கூப்பிடுவது காதில் விழவில்லையா? அடடா, ஏன் இப்படி சோர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டாய்? அதுவும் ரொம்ப நேரமாக. கலங்கி இருக்கின்றனவே உன் கண்கள்! என்ன காரணம்?... ஓகோ! கையிலே மூடிய பேனு; எதிரே காகிதம்; கணக்குப் புத்தகம்!... புரிந்துவிட்டது எனக்கு. உன் நிலை கண்டு எனக்கு கவலை வரவில்லை தம்பி; ஆனுல் சிரிப்புதான் வருகிறது, இப்படியும் ஒரு தம்பி உண்டா என்று! கணக்குப் புரியவில்லை என்ருல், இப்படியா கலங்குவார்கள்; சிலைபோலா உட்கார்ந்து விடுவார்கள்?

கேள் தம்பீ! உன்னைப்போல் ஒரு பையன்—நல்ல பையன்தான்! ஆனுல் கணக்கு என்ருலோ அவனுக்கு நல்லபாம்பு! அதனுலேயே மூன்று முறை பள்ளியில் தோல்வி அடைந்துவிட்டான். மற்ற குறும்பர்கள் சும்மாவா இருப்பார்கள்? ஒரே கிண்டல்; கேலி! அதனுல் அந்தப் பையன் சோர்ந்துவிட்டான் என்று நினைத்து விடாதே! கணக்கால் தோற்ருன் ஒரு நாள்; ஆனுல் பின்னுல் தன் நாட்டின் நிதி மந்திரியாகவும் ஆனுர்; பிரதம மந்திரியாகவும் நான்கு முறை ஆகி விட்டார். மூன்று முறை தேர்வில் தோற்ற அவர்தான், இன்று தனது எண்பதாவது வயதில் பதினுருவது முறையாக பார்லிமெண்ட் தேர்தலில் வென்றிருக்கிருர்! என்ன இப்படி விழிக்கிருய்? பொய்யல்ல; உலகத்து மேதைகளில் ஒருவராக நடமாடுகிருரே இன்று, அந்த சர்ச்சில் தான், நான் குறிப்பிடும் படையெடுப்பு பயில்வான்!

இன்னும் கேள்; பசு மாட்டு மந்தையை ஓட்டிக் கொண்டு— அழுக்குப் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டு திரிந்தான் ஒருநாள் ஒரு சிறுவன். இன்ரே அவன் அமெரிக்காவின் ஜனுதிபதி-நீயும் நானும் இந்த உலகமும் அவர் பேச்சை—உதட்டசைவை உன்னிப்பாக கவனிக்கிறதே, அந்த ஐசனேவர்தான்!

ஏன் திகைக்கிருய்? இவர்களுடைய முன்னேற்றத்துக்குக் காரணமென்ன? கொஞ்சம் எண்ணிப் பார்! சிந்தித்துப் பார்; பின் கட்டாயம் பார்த்து விடுவாய் அவர்களுக்கெல்லாம் உதவிய நண்பன் ஒருவனை! ஆமாம் தம்பி, அந்த நண்பன் அவ்வளவு சுலபத்தில் அகப்பட மாட்டான்; தானுக உறவாடவும் மாட்டான்; நீதான் ஓட வேண்டும், அவனைத் தேடிக் கொண்டு!

என்ன, மீண்டும் பேனைவத் திறந்துவிட்டாய்? கணக்குப் போட ஆரம்பித்து விட்டாயா? நல்லது; நல்லது. அந்த நண்பன் யாரெனத் தெரிந்து கொண்டாய் போலிருக்கிறதே! சரி, சரி; விடாதே அவனை; துரத்து! அதோ கண்ணுக் கெட்டிய தூரத்தில்தான் ஓடுகிருன், அந்த முயற்சி நண்பன்!

## சிறிய வயதிலே

எட்டு வயதுப் பையன் அவன். அவனுக்குப் பட்டம் விடுவதில் கொள்ளை ஆசை. பட்டப் பகல்—நடுநிசி—எந்த நேரமானுலும், ஏற்றிய பட்டத்தை இறக்கவே மாட்டான். காற்ருேடு விளையாடுவதில் அத்தனை ஆர்வம் அவனுக்கு.

ஒரு நாள் மாலை. வீட்டுக் கொல்லைப்புறம். பட்டத்து நூலை மரமொன்றில் கட்டி விட்டான். படமெடுத்த பாம்பு போல வானத்தில் நடனமாடும் பட்டத்தைப் பார்த்தான். ரசித்துக்கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்தாள் அம்மா.

"பாரம்மா பட்டத்தை... இன்று நூறு கஜம் அதிக நூல் விட்டிருக்கிறேன்"— பெருமிதத்தோடு சொன்ஞன் தம்பி.

"நல்லது தம்பி! உன்னிடம் ஒரு செய்தி சொல்ல வந்தேன்.சொல்லட்டுமா?." என்ருள்.

"சொல்லம்மா..."

"சொல்லுகிறேன். நீ என் கர்ப்பத்திலிருக்கும் போது கனவொன்று கண்டேன். சிலரிடம் சொன்னேன். 'அடி பைத்தியமே! நடக்குமா, இப்படி?' என்று கேலி செய்தார்கள். உன்னிடம் சொல்லுகிறேன் கண்ணே! பறக்கும் இயந்திரம் ஒன்றில், பிறக்கப் போகும் நீ ஆகாயத்தில் பறந்தாய் அன்று இரவு—கனவில்தான்; நீயும் சிரிக்காதே. ஆனுல் இன்று செய்தி பார்த்தாயா? யாரோ இருவராம் — ரைட் சகோதரர்கள் என்று பெயராம்—நூறு செகண்ட் ஆகாயத்தில் பறந்து 'விட்டார்களாம்... நீயே சொல்; நான் கண்ட கனவு பைத்தியக்காரத் தனமானதா?"—என்று கேட்டாள் அம்மா!

"இல்லை அம்மா! பார், அதோ பறக்கிறது பட்டம். அதற்கு விசை இந்த நூல்; இதைப் போல இன்னும் வலுவுள்ள — 'இன்ஜின்' வைத்த பெரிய பட்டம் செய்தால்...? ஏன், நானே செய்யப் போகிறேன் அம்மா, இன்று முதல் அது தான் என் வேலை!" என்ருன் தம்பி. திடீர் முடிவுக்கு வந்தான். அம்மா திகைத்தாள்.

அந்தச் சபதம் வெறும் வாய் வீச்சாகப் போய் விடவில்லை. சிறுபிள்ளைக் கனவாகி விடவில்லை. ரைட் சகோதரர்களுக்குப் பிறகு— பிற்காலத்தில் முற்றிலும் புதிய கருவிகளோடு விண்ணிலே பறந்து-விண் முட்ட புகழ் பெற்று—அம்மாவின் கனவை நனவாக்கிய அந்த தங்கத் தம்பிதான் கிளேன் மார்ட்டின் என்பான்!

பெரிய மனிதர்கள்

# 'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர் :
(● என். ஏ. துரை; பூமசவுண்டன்வலசு (திருச்சி மா.)

மணியம்; கஞ்சிக்கோடு.

(?) நேருவுக்குப் பிறகு காங்கிரசின் கதி என்ன?

அதோகதிதான்!

எம். எஸ். மணி; அரியலூர்.

(?) லட்சுமணபுரியிலுள்ள ஒரு காளி கோவிலில் ஒரு பக்தர் நாக்கை அறுத்துக் கொண்டாராமே; அப்படியானால் கடவுள் இருக்கிறாரா?

கடவுள் இருந்தால் அவர் பக்தர்களின் நாக்கின்மீது ஆசை வைத்திருக்கமாட்டார். நாத்தீகர்களின் நாக்கைத்தான் கேட்டிருப்பார்!

(?) தி.மு.க. வில் உள்ளவர்களெல்லாம் ஆளுக்கொரு அச்சகமும், பத்திரிகையும் வைத்திருப்பதாக ஒரு காங்கிரஸ்காரர் சொல்லுகிறார். நீர் என்ன சொல்கிறீர்?

எங்களுக்கென்ன பிர்மாண்டமான அச்சகங்கள் வைத்து பிரச்சாரம் வழங்குவதற்கு டால்மியாக்கள் இருக்கிறார்களா? டாட்டாக்கள் முன்வருகிறார்களா? எங்களுக்கு நாங்களேதான் உதவி செய்துகொள்ளவேண்டியிருக்கிறது.

பா. சோக்கலிங்கம்; மைலாப்பூர்.

(?) சென்ற ஞாயிறன்று இங்கு பேசிய 'சின்னது'ஒன்று, 'தமிழ் இலக்கியத்தில் தனித் தமிழ் நூல் கிடையாது' என்று சொன்னார். தங்கள் கருத்தென்ன?

பேசிய இடம் மைலாப்பூர் அல்லவா' எனவேதான் அப்படி உளறியிருக்கிறார். அவரைச் சங்க ஏடுகளைப் புரட்டச்சொல்லும். புரியாவிட்டால் ஒரு பண்டிதரை துணைக்கு வைத்துக் கொள்ளச்சொல்லும். அங்கே தனித் தமிழ் பருகலாம்!

யாரோ; தஞ்சை.

(?) சிந்தனையாளருக்கும், செயல் வீரனுக்கும் உள்ள வித்யாசம் யாது?

சிந்தனையாளன் ஒரு உலைக்கூடம். செயல் வீரன் அதிலே தயாராகும் கூர்வாள்!

(●) என். ஏ. துரை;
பூமசவுண்டன்வலசு.

(?) குறைந்த செலவில் செய்யக்கூடிய நல்ல காரியம் எது?

எட்டணா கொடுத்து தி.மு.க. அங்கத்தினராவதுதான்.

'எஞர்சி'-வடசேரி.

(?) சிலர் நம்மை நாஸ்திகர்கள் என்று திட்டுகிறார்களே; இது நமக்கு இழிவு தருவதாக இல்லையா?

'கண்ணீர்த்துளிகள்' என்னும் இழிசொல்லையேபெருமைதரும் சொல்லாக மாற்றிக்கொண்டவர்களாயா, 'நாத்திகர்' என்ற பட்டம் நாசம் செய்துவிடப் போகிறது? பரவாயில்லை; இங்கர்சால போன்ற அறிஞர்களையெல்லாம் 'நாத்திகர்' என்றுதான் அழைத்திருக்கிறார்கள்!

வில்சன்; சீர்காழி.

(?) ஒரு பொதுநலத் தொண்டனின் மகளை ஒரு சுயநலத் தொண்டனின் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தால், அந்தக் குடும்பம் எதை நாடும்? பொது நலத்தையா? சுய நலத்தையா?

பொதுநலத்தைத்தான்; ஏனெனில் பெண் எவ்வழியோ அவ்வழியேதான் குடும்ப ஓடமும் நகர்கிறது!

மா. இராமச்சந்திரன்; புதுவை.

(?) சமீபத்தில் கட்டாய இந்தியை எதிர்ப்பதாக கம்யூனிஸ்ட் கட்சிக் கமிட்டி தீர்மானம் போட்டிருக்கிறதே: இது எதை நினைவுப் படுத்துகிறது?

வீடு தீப்பற்றி எரியும்போது சும்மாயிருந்துவிட்டு, அதை அக்கம் பக்கத்திலுள்ளோர் அணைத்து விட்ட பிறகு, தூங்கி விழித்த ஒருவன் தீயணைக்கும் படைக்கு சேதிசொல்லி அனுப்பவேண்டுமென்று முடிவு செய்தானாம்! அதைப்போல இருக்கிறது!

## புதையல்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

கொலைவெறித் தன்மை இருந்தது!

''மாயாண்டி — மரியாதையாக அதை இங்கே கொடு'' என்று கத்தினான், அந்த முரடன்.

''யார்? அடப் பாவி-ஐயப்பனா?' என்று அலறினார் மாயாண்டி. பரிமளா கதறிக் கொண்டு ஓட ஆரம்பித்தாள்.

[வளரும்]

## திருச்சி மாநில மாநாட்டு நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு

5—6—55 காலை 9 மணிக்கு
கோகலே மண்டபத்தில்

நடிப்புப் புலவர்
**கே. ஆர். ராமசாமி**
அவர்கள் தலைமையில்

சொல்லின் செல்வர் தோழர்
**ஈ. வெ. கி. சம்பத்**
அவர்கள்
"மக்களும் ஆட்சியும்"
என்னும் பொருள்பற்றி பேசுவார்.

நன்கொடை: ரூ. 1 அணா 8
சென்னை மாவட்ட தி. மு. க.



'வான்கோழி நடனம்' என்ற கட்டுரை ஆச்சாரியாருக்கு மட்டுமல்லாது எழுத்து திருடிகளுக்கும் ஒரு பாடம்.

— ஜி. எஸ். பாண்டியன்,
அவிசாவெல்ல, சிலோன்.

'கல்வி திட்டம் மத அடிப்படையிலே' இருக்கவேண்டும் என்று பிதற்றியிருக்கும் எஸ். வெங்கட்ராமன் போன்றோர் 27-5-55 இதழின் 'பித்தம தெளிவீர்' என்ற தலையங்கத்தை படித்த பிறகு, கல்வி அமுதிலே மதமென்னும் விஷம் கலக்காமல் இருக்க பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் சரித்திரங்களை புரட்டிப் பார்த்து திருந்தி விடுவார் என எதிர்பார்க்கின்றேன்.

—ஏ. கே. நடராசன்,
திருவல்லிக்கேணி.

தங்கள் பத்திரிகையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நான், கையில் கிடைத்ததும் மகாபாரதம் தொடர் சித்திரம் எங்கு என்று தேடி அதைப் பார்த்த பின்தான் நிம்மதி ஏற்படும். தவிர இவைகள் ஒரு புத்தக வடிவில் அவசியம் பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்வீர்கள் என நம்புகிறேன்.

—இராமன்,
புஞ்சைபுளியம்பட்டி

'செத்தும் கொடுத்தவன்' படித்தேன். வசை பாடி பிழைக்கும் இழிதகையாளருக்கு தக்கதோர் பாடமாய் அமைந்திருக்கிறது.

—இராசப்பா,
பூவனூர்.

''கடல் கடந்தோரின் மடல்'' என் கண்களைக் கலங்கச் செய்து விட்டது. இலங்கைத் தமிழர்களின் நிலைதான் மற்றோருக்கும் கிடைக்குமோ என மனம் எண்ணுகின்றது.

—அண்ணா. பழனியப்பன்,
இராமச்சந்திரபுரம்.



## வாழ்க மணமக்கள்!

நமது "முரசொலி" அலுவலக ஓவியர் தோழர் சி. வி. ராசன் — தோழியர் தனலட்சுமி திருமணம் 2—6—55 வியாழன் காலை 8-30 மணிக்கு சேலம் நகரில் சிறப்பாக நடைபெற்றது. தமிழாசிரியர் சின்னண்ணன் விழாவிற்குத் தலைமை வகித்தார். தோழர் ஏ. சித்தையன் — மற்றும் பல தோழர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினர். மணமகன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

புது வாழ்வு தொடங்கியிருக்கும் தோழருக்கு முரசொலி அலுவலக நண்பர்கள் தங்கள் உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்!

வாழ்க மணமக்கள்!

படிக்கிறீர்களா?
திராவிட இயக்கத்தின்
அரசியல் கருத்துகளை
சமுதாயக் கொள்கைகளை
பொருளாதாரத் திட்டங்களை
தெள்ளத் தெளிய
விளக்குகிறான்
தம்பி
ஆசிரியர்
தில்லை வில்லாளன் எம்.ஏ
வாரந்தோறும் வெளிவருகிறது
தனியிதழ் 2 அணா
விபரங்களுக்கு எழுதுங்கள்
தம்பி அலுவலகம்
சிதம்பரம்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. அலுவலகம்; 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.